ISSN 1703-9185

# ஆத்மஜோதி

# Arthmajothy

April-June 2008
சர்வதாரி சித்திரை-ஆனி 2008
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

புதிய இடத்தில்

# VANI KKIRUBAA INC.

## Custom Framing Book Depot

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும் சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் Photo, திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் Fram செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva: 416-265-3605**

294 MARKHAM ROAD, SCARBOROUGH
(Markham & Eglinton)

---

உங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்தி செய்ய ஓர் நம்பிக்கையான நிறுவனம்

ஆயுள்காப்புறுதி உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஓர் பாதுகாப்பு

**பணத்தை மீளப்பெறக்கூடிய புதிய ஆயுட்காப்புறுதித் திட்டம்**


- நிரந்தர ஆயுட்காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- பதிவு செய்யப்பட்ட சிறுவர் சேமிப்புத் திட்டம்

## ஸ்ரீதரன் துரைராஜா



## SRITHARAN THURAIRAJAH

# 416-918-9771



மலர் 7: இதழ் 4
சர்வசித்து வருடம்
சித்திரை - ஆனி
திருவள்ளுவர்
ஆண்டு
*2038*

**கௌரவ ஆசிரியர்கள்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

உ
*சிவமயம்*

# ஆத்மஜோதி

***தாபிதம்: 1948***

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. நீந்துகவே முத்தியின்ப நீழல்
4. தியானமும் தெய்வவழிபாடும்
5. திருவாசகத்தில் இறையனுபவம்
6. நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
7. விசாலாட்சி அம்மையார்
8. ஆத்மஜோதி வெளியீடு
9. சைவப் பெரியார் திரு. அ. தில்லையம்பலம்
10. ஆத்மீகக் கணக்கு
11. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
12. என்னை ஆத்மீகத்துக்கு வலுப்படுத்திய திருவாசகம்
13. சிதம்பரத்தில் இந்து சமயப் பேரவை அடியார்கள்
14. ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளிடம் கேட்டவை

# துர்க்காதுரந்தரி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே

என்ற அப்பர் பெருமான் திருவாக்குக்கு அமையப் பணிசெய்து கிடக்கவென்று தங்கம்மா அவர்கள் யாழ்ப்பாணம் மல்லாகத்தில் 1925ஆம் ஆண்டு யனவரி 7ஆந் திகதி பிறந்தார்.

தவஞ் செய்த பெற்றோர் திருவாளர் கந்தர் அப்பாக்குட்டியும் திருமதி தையற்பிள்ளை அப்பாக்குட்டியுமாவர்.

மல்லாகம் அமெரிக்க மிசன் பாடசாலையில் ஆரம்ப கல்வியையும் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் இடைநிலைக் கல்வியையும் கற்றபின் 1941ஆம் ஆண்டு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்குத் தெரிவுசெய்யப் பெற்றார். தங்கம்மாவின் சமயவாழ்வுக்கு வித்திட்ட கோயில் இராமநாதன் கல்லூரியேயாகும். அங்கு புத்தகப் படிப்புக்குப் புறம்பாக சிவவழிபாடும் திருமுறை ஓதுதலும் புராணபடனமும் குரு பூசைகளும் கட்டாயமான செயல் முறைப் பாடுகள்; ஒழுக்கமும் கட்டுப்பாடும் உயிர் நிலைப்பாடுகள். இப்பாடுகளில் தோய்ந்து ஒழுகி இறுதித் தேர்விலும் சிறப்பாகச் சித்தி பெற்று 1944ல் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக அவர் வெளியேறினார்.

தங்கம்மா அவர்கள் முதன்முதலாகக் கற்பிக்கத் தொடங்கியது மட்டக்களப்பு புனித சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில். ஏறத்தாழ மூன்று ஆண்டுகளின்பின் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலை வழங்கிய ஆசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார். 1964ல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. கிறித்துவம், இஸ்லாம் ஆகிய சமயங்களையும் அவற்றின் ஒழுக்க நெறிகளையும் நன்கு அறிந்து

கொள்ள இப் பாடசாலைச் சூழல்கள் தங்கம்மாவுக்கு வாய்ப்புக் களை அளித்தன. இந்த அனுபவங்கள் அவரது பார்வையை உலகளாவிய நிலையில் விரிவடையச் செய்து 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமந்திரத்துக்கு விளக்கம் அளித்தன.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. - குறள் 397

என்றார் வள்ளுவர் பெருமான். அதற்கேற்பத் தங்கம்மா அவர்களும் ஆசிரியரான பின்னர் பாலபண்டிதர், பண்டிதர் ஆகிய பரீட்சைகளிற் சித்தியடைந்து சென்னை சைவசித்தாந்த சமாசம் நடத்திய சைவப் புலவர் பரீட்சையிலும் தேர்ச்சிபெற்றார். இராமநாதன் கல்லூரியிற் கற்ற காலத்திலேயே பேசத் தொடங்கியவர் பின்னர் நாடறிந்த சொற்பொழிவாளராகப் பவனிவரத் தொடங்கிவிட்டார். திருவிழாக்கள், இலக்கிய விழாக்கள், கருத்தரங்கங்கள், பட்டிமன்றங்கள், சனசமூக நிலையங்கள் என்று எல்லா மேடைகளிலும் தங்கம்மாவின் தங்கக் குரல் ஒலித்தது. எனினும் உலகியல் அறிவை மெய்ப்பொருள் காணும் அறிவு முந்திக்கொண்ட நிலையில், சமய வாழ்வுக்கே தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்னும் மனப் பக்குவமும் நிலைபெற்றுக் கொண்டது.

இந்தப் பக்குவநிலையை வளர்த்தெடுத்த அவரது குலதெய்வமாகிய துர்க்கை அம்மன் 1961ல் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி ஆட்கொண்டருளினார். இந்த ஆண்டுதான் துர்க்காதேவி ஆலயத்தின் திருப்பணிச் சபை அங்கத்தவராக அம்மையார் சேர்ந்த ஆண்டு.

1966ஆம் ஆண்டு பொருளாளர் பதவி அவரை வந்தடைந்தது. ஏற்கனவே தமது நாவன்மையால் தமிழுலகத்தில் பெருமதிப்பைப் பெற்றுக் கொண்ட அவருக்குத் திருப் பணிக்கு நிதி திரட்டுவதிற் சிரமம் எதுவும் இருக்கவில்லை. கோயில்க் கட்டிடப் பணிகள் தடையின்றித் தொடர்ந்தன. வரவு செலவுகளைக் கண்ணிய மாகவும் கவன மாகவும் கையாண்டு பணியே தன்கடன் என்றிருந்த நிர்வாக சபையின் பொருளாளருக்கு 1976ல் தலைமைப் பதவியும் வந்து

---

*ஞானி எதையும் விரும்புவதில்லை*
*எதையும் வெறுப்பதில்லை.*

சேர்ந்தது. துர்க்கையை வணங்கித் துணிவோடு ஏற்றுக் கொண்டார். துரிதமாக எஞ்சியுள்ள திருப்பணிகள் தொடரலாயின.

தலைமைப் பதவியேற்றதைத் தொடர்ந்து உட்பிரகாரக் கொட்டகை, தேர்முட்டி, சித்திரத் தேர், அலுவலகம், சண்டேசுவரர் கோயில், ஞானசுரபி மண்டபம், இராச கோபுரம், அலங்கார வெளிவாயில், அன்னபூரணி மண்டபம், துர்க்கா புஷ்பகரணித் தடாகம், தீர்த்த மண்டபம், அன்னபூரணி கல்யாண மண்டபம், சுற்றுமதில் ஆகியன பத்து ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்பட்டன.

கோயில் ஆகமவிதிகளுக்கேற்ற முறையில் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டபின்னர், தலைவர் பொதுப் பணிகளுக்கான திட்டங்களிற் கவனஞ் செலுத்தத் தொடங்கினார். மகளிர் இல்லம், குழாய்க் கிணறு, அகதிகள் வெளிமண்டபம், நூலகம், பணியாளர் விடுதி, புதிய அன்னதான மண்டபம், நல்லூர் துர்க்கா சிறுகுடில், நல்லூர் துர்க்கா மணிமண்டபம், அன்னையர் இல்லம் ஆகியன அமைக்கப்பட்டன. இவற்றால்

படமாடக் கோயிற் பகவர்க்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவர்க் தாமே

என்னும் திருமந்திர தத்தவத்தை செயல்முறையிற் காட்டி, மக்களை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைப்பதே உண்மையான இறைவழிபாடு என்பதை உலகத்தவர்க்கு உணர்த்தலானார் அம்மையார். தேவாலய நிதியிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கும் யாழ் பல்கலைக்கழகச் சைவசிந்தாந்த பீடத்துக்கும் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கும் நன்கொடைகள் செய்துள்ளார். 1990ஆம் ஆண்டு 'சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியம்' என்ற பெயரில் வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பித்து அதன்மூலம் பலவகையான அறப்பணிகளைச் செய்துவந்தார்.

இடையிடையே சொற்பொழிவுத் தொண்டும் எழுத்துப் பணியும் தொடர்ந்துகொண்டே இருந்தன. கற்றோருக்குச் சென்ற

இடமெல்லாஞ் சிறப்பு. அம்மையாருக்குக் கிடைத்த சிறப்புக்கள் கூறிமுடியா. பெற்ற பட்டங்களும் பல. ஒருசில பின்வருமாறு:

1966: செஞ்சொற் செம்மணி - மதுரை ஆதீனம்

1970: சிவத்தமிழச் செல்வி - காரைநகர் சிவன்கோயில்

1972: திருவாசகக் கொண்டல் - மலேசியா

1973: சிவஞான வித்தகர் - அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு

1973: துர்க்காதுரந்தரி - துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

1982: சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் எடுத்தல்

1991: கலாசூரி - இலங்கை அரசு

1998: கௌரவ கலாநிதிப் பட்டம் - யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

1999: துவிஜோத்தமி - சைவ சித்தாந்த மன்றம், கனடா

2007: உலக ஆன்மீக மறுமலர்ச்சியாளர் - ஹவாய் சைவ ஆதீனம்

இவரது 'கந்தபுராணச் சொற்பொழிவு' என்ற நூலுக்கு 1978ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. 1985இல் மணிவிழாவும் 2000இல் பவள விழாவும் 2005இல் முத்து விழாவும் கொண்டாடப்பட்டன.

அருள்மிகு துர்க்காதேவி எமக்கு வழங்கிய இணையற்ற நன்கொடை அம்மையார். பேச்சு வன்மை, நிர்வாகத் திறன், செயன்முறைச் சிறப்பு என்பவற்றுக்கு அப்பால் அவரது மக்கட்பண்பே அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்த சக்தியாக இருந்தது. சக்தி வழிபாட்டை வளர்த்தெடுத்த அம்மையார் சைவ சமயப் பணிகளில் ஈடுபட்டுவருபவர்க்கெல்லாம் உந்து சக்தியாகவே இருந்தார். அவரது மறைவு சைவ உலகத்துக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு. அவரது அமைப்புகளுக்கு உதவி செய்து அமைதி பெறுவோமாக!

வி. கந்தவனம்

---

*இறையருள் இருந்தால் வேறு ஒருவரின் உதவி தேவையில்லை*

# எங்குமுள்ள பிள்ளையார்

## நவுண்டில்
## குலணைப்பதி விநாயகர்

ஆரமுதை யானைமுகப் பிள்ளை யாரை
அமரர்துயர் தீர்த்தவுயர் வள்ள லாரை
ஓரமுனர் நாடியுற வாடு வாரை
ஊருலகம் எங்கெங்கும் வீடு ளாரை
தீரவிடர் அருள்புரியுந் தேவ தேவை
சீரமைதி ஊக்கமுயர் ஒழுக்கம் பேணும்
வீரநவுண் டிற்குலணைப் பதியில் மேவும்
விநாயகரை வீடுபெற வேண்டு வாமே. (56)

## கரவெட்டி
## தச்சன்தோப்புப் பிள்ளையார்

மருளான சூரற்கு மருந்தாய் நின்றார்
வானோரின் வாழ்வுக்கு விருந்தாய் நின்றார்
பொருளாகத் தருமத்தைப் போற்றும் மக்கள்
பொலிகின்ற மருதஞ்சூழ் பொருவில் ஊராம்
கரவையம் பதிகாணும் தச்சன் தோப்பில்
கல்விகலை செல்வநிலை பல்கி யோங்க
அருள்பாலித் தாள்கின்ற பிள்ளை யாரை
அடைவாரைத் தீவினைகள் அடையா வாமே. (57)

## உடுப்பிட்டி
## பண்டகைப் பிள்ளையார்

வன்பகைகள் மன்பதையில் மாள வேண்டின்
வாழ்வாங்கு வாழ்தற்கு வழிகள் கூறும்
அன்புநெறி அகிலத்தை ஆள வேண்டின்
ஆருயிர்கள் அமைதியுடன் வாழ வேண்டின்
இன்பநலக் கல்விகலை ஏற்றம் வேண்டின்
இணையற்ற மருதவள எழிலில் ஓங்கும்
பண்புவளர் உடுப்பிட்டிப் பதியைத் தாங்கும்
பண்டைகைப்பிள் ளைகழல்கள் பரவு வாமே. (58)

புலோலி தெற்கு
அத்தியடிப் பிள்ளையார்

கயமுகனைக் கொன்றமரர் வாழ்வு காத்தார்
கைத்திறத்தால் அவ்வையினைக் கயிலை சேர்த்தார்
உயிருலகை ஓம்பிமிகத் தாங்கி நிற்பார்
ஊழிவருங் காலத்தும் ஓங்கி நிற்பார்
தயிரதனில் நெய்போலக் கலந்தி ருப்பார்
தலையாரக் கும்பிட்டால் துலங்கி நிற்பார்
அயர்வறியா ஆற்றல்மிகு புலோலி தெற்கின்
அத்தியடி யமர்ந்தருளும் பிள்ளை யாரே. (59)

- வி. கந்தவனம்

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**

# நீந்துகவே முத்தியின்ப நீழல்!

எங்கள் திருமகளே ஈடிற் கலைமகளே
பொங்கும் புதுப்புனலே பூமகளே - தங்கம்மா
என்னும் தவமகளே இன்பச் சிவத்தமிழே
என்ன இனிச்செய்வோ மே.

சைவப் பணிகளுடன் சார்ந்த தமிழ்ப்பணிகள்
ஐயை அருட்துர்க்கை ஆலயத்தில் - செய்த
திருப்பணிகள் மக்கள் நலப்பணிகள் செய்ய
இருப்பவர்யார் அந்தோ இனி.

ஊருலகம் நன்மைபெற ஊறிநின்ற ஊருணியே
காரைநிலம் கற்றரைகள் காடெல்லாம் - ஏரெனவே
சீராய் உழுது பதஞ்செய்து செம்பயிர்தான்
வேரிடவே வைத்தாய் விதைத்து.

சொல்லால் எழுத்தால் தொடர்தொண்டால் பண்பாட்டால்
வெல்லா மனங்களையும் வென்றன்பு - நல்லாய்ச்
சொரிந்த சிவஞான வித்தகியே துர்க்கா
துரந்தரியே ஆகினையோ சோதி.

ஒன்றே குலமென்றும் தேவன் ஒருவனென்றும்
சென்ற இடங்கள் செலச்சொல்லி - நன்றே
பரந்த மனப்பான்மைப் பக்குவத்தைத் துர்க்கா
துரந்தரியே காத்தாய் துணிந்து.

கண்ணின் ஒளியே கருத்தின் பெருவிருந்தே
பெண்ணின் பெருமைநலப் பேராறே - மண்ணதனில்
துர்க்கை வழிபாட்டைத் தூக்கித் துலக்கியபேர்
நிற்கும் நிலத்தில் நிலைத்து.

தூய துறவறத்துத் துர்க்கா துரந்தரியே
தாயே தமிழர் தலைமகளே - ஆயபுகழ்
ஆறுமுக நாவலர்பின் ஆன்ற தமிழ்ச்சைவம்
ஏறுபுகழ் எய்தவைத்தா யே.

பாங்கான தெய்வப் பணிகள் பலசெய்த
ஓங்கார ஓசை உறங்கியதால் - தாங்காதே
ஏந்திச் சுடர்விளக்கை என்றும் வணங்கிடுவோம்
நீந்துகவே முத்தியின்ப நீழல்.

- வி. கந்தவனம்



வைகாசி விசாகத்திலன்று நடைபெற்ற ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஜெயந்தி விழாவில் இஸ்ட தெய்வ நாமஜெபப் போட்டியில் பங்கு பற்றிய சிறார்கள்.

# தியானமும் தெய்வ வழிபாடும்

'சமூகமணி', 'சிவஞானச் செல்வர்'
சி. சி. வரதராசா J. P.

இறைவனை நாம் வழிபடும்போது எமது புனிதமான உள்ளங்களில் ஆத்மீக, தியான தெய்வீக உணர்வுகள் முதலில் குடிகொள்ள வேண்டும். 'தியானம்' என்பது உண்மையில் தெய்வீக வழிபாட்டின் ஓர் அம்சம் என்று பொதுவாக நாம் நினைக்கின்றோம்.

இது முற்றிலும் உண்மை தான்! ஆனால் சாதாரண தெய்வ வழிபாட்டு முறையினையே நாம் தியானம் என்று அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாது. கூடாது.

நாம் அனைவரும் மன நிம்மதி, மன ஆறுதல் பெற, மன நிறைவு பெற்றுத் ,தினமும் சந்தோசமாக வாழ்வதற்கு தியானமும், தெய்வீக வழிபாடும் சகலருக்கும் மிக அவசியம்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் அன்றாடம் ஆலயங்களுக்குச் சென்று கடவுளை வழிபடுகின்றனர்.

ஆலய பிரதான உற்சவ காலங்களில் ஆலயங்களுக்குச் சென்று தெய்வீக வழிபாடு நடத்துவோர் தொகை ஆயிரக்கணக்கில் - இலட்சக்கணக்கில்கூட இருப்பதுண்டு.

இவர்கள் அத்தனை பேரும் ஆலயங்களில் அமர்ந்து தியானம் செய்கின்றார்கள் என்று கூறலாமா?

கூறுவதற்கில்லை. ஆலயத்திற்குள் இருக்கின்ற திரளான மக்களுள் ஓரிருவர் - அல்லது சிலர் தியான நிலையில் இருந்து பக்திப் பரவசத்துடன் பரமனை வழிபடக்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை. மற்றவர்களைக் குறித்து அவ்வாறு கூறமுடியாது.

தியானம் என்பது தெய்வ வழிபாட்டின் உண்மையான பக்தி நெறி முறையின் அதி தீவிரமான ஒரு நிலையாகும்.

அந்த அதீத நிலையினை அடைவதற்குத் தீவிரமான முயற்சியும் கடுமையான பயிற்சியும் தேவை என நமது ஆன்மீகப் பெரியவர்கள் கருதினர்.

இறைவனை - அல்லது உண்மையான இறைமையை முழுமையாக விளங்கிக் கொள்வது - அந்த இறைவன் அல்லது இறைமையின் மிகவும் உயர்ந்த தன்மையினைத் தானே பெற்றுப்

---

*உலக இன்பத்தில் திளைக்கும் உயிர்க்கு
உலகம் விளங்காது*

பேரானந்த நிலையை அடைவது இறைவனோடு இரண்டறக் கலந்து விடும் தெய்வ வழிபாட்டின் இறுதியான பெரும்பேற்றினை நாம் அடைவது என்றெல்லாம் ஆன்மீகப் பெரியோர் தியானத்தின் முக்கிய நோக்கம் அதன் பயன் குறித்து விளக்கமளிக்கின்றனர்.

இந்தப் புனிதமான விளக்கத்தை வைத்துக் கொண்டு தியானத்தைப் பற்றியும், தெய்வ வழிபாடு பற்றியும், மனித வாழ்க்கையைப் பற்றியும் தத்தம் மனப்போக்கில் பலர் விமர்சனம் செய்வதும் உண்டு.

## தெய்வத்தை மறவாதீர்:-

தெய்வத்தை மட்டும் எப்போதும் மறவாதீர்கள். உள்ளன்போடு தெய்வீக வழிபாடு செய்யுங்கள். தன்நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். யாரையும் விமர்சிக்காதீர்கள். உண்மையில் தெய்வத்தின் மேல் உள்ள தன்நம்பிக்கையை அதிகரித்துக் கொள்ளுங்கள். எந்த அளவுக்கு தெய்வ நம்பிக்கையை நாம் வளர்த்துக் கொள்கிறோமோ, எந்த அளவுக்கு தெய்வத்தின் மேல் நாம் அன்பைப் பெருக்கிக் கொள்கிறோமோ, அப்போது தான் நம் புனிதமான வாழ்க்கை நம் தேசம், ஏன் பிரபஞ்சம் முழுவதும்கூட நல்வழிப்படும், நன்கு வளரும்.

இறைவனுக்கு நீங்கள் உள்ளன்போடு சிறிது கொடுத்தால், அவர் உங்களுக்கு அளவற்றதை வழங்குவார். கீதை இறைவனுக்கு நீ பழம், இலை, மலர், நீர் எதனையும் கொடுக்கலாம் என்று கூறுகிறது. பழம் என்பது எமதுமனம், செயல், பிரதிச் செயல் ஆகும். பத்திரம் (இலை) என்பது உடல், புஷ்பம் என்பது இருதய புஷ்பம், தோயம் (நீர்) என்பது ஆனந்தக் கண்ணீர். இந்த நான்கையும் இறைவனுக்கு உள்ளன்போடு நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

"ஓம் நமசிவாய' 'அன்பே சிவம்' - 'அன்பே கடவுள்' - 'சிவாயநம' "ஓம் நமசிவாய', 'சிவசிவ' என்பதை நாம் உள்ளத்தில் தினமும் புகுத்தி உள்ளன்போடு நாம் இறைவனை தியானம் மூலம் வழிபட வேண்டும்.

---

*தமிழ் மந்திரங்களாகிய திருமுறைப்பாடல்களை அன்பு மேலிட ஓதுபவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் எல்லாத் தீங்கிலிருந்தும் நீங்கி நலம் பல பெற்று இன்புறுவார்கள்.*

*உடலுக்கு உறுதி அளிக்கும் உலக நூல்களைக் காட்டிலும் உயிர்க்கு உறுதி தரும் மேன்மை வாய்ந்தவை திருமுறைகள்.*

# திருவாசகத்தில் இறையனுபவம்

**இளைப்பாறிய அதிபர் திரு. க. சண்முகம்**

திருவாசகம் ஆன்மா, அறியாமை, ஆசை, ஆகிய பந்தங்களில் இருந்து நீங்கி, இறைவனோடு கலக்கும் இன்பத்தையும், அமைதியையும், அலைகின்ற மனத்திற்கு ஓய்வையும் அளிக்கும் ஒரு மருந்து; கடவுள் அருளை அள்ளி வழங்கும் புண்ணிய நூல். இந்நூலை ஒருமுறை ஓதினாலும் உயிர் தன் தன்மை கெட்டு சிவத்தன்மையாதல் தெளிவு. கருங்கல் மனமும் கரைந்து விடும். உள்ளம் கலந்துவிடும்.

அடிகளார் தாம் பெற்ற இன்ப அனுபவத்தை தன் பாடல்களில் விரிவாகக் கூறியுள்ளார். அந்த அனுபவம் உடலை என்ன செய்தது, பொறிபுலன்களை என்ன செய்தது, மனத்தை உள்ளத்தை என்ன செய்தது, உயிரை என்ன செய்தது என்பதை அடிகளார் எடுத்து விரிவாகக் கூறிய சிறப்பும் பெருமையும் நினைக்க, இன்பம் தருவன.

'எனைநாள் என்பது அறியேன் பகல் இரவாவதும் அறியேன்
மனவாசகம் கடந்தான் எனை மத்தோன்மத்தன் ஆக்கிச்
சினமால் விடை உடையான் மன்னு திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைச் செய்தபடிறு அறியேன் பரஞ்சுடரே

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோன்: வலியவந்து எளியேனை ஆட்கொண்டு அருளிச் செய்தது அருளிப்பாடு இத்தன்மையதென்று அறியேன். எனைப் பெரும்பித்தனாக்கியருளினன். இந்நிலையில் எளியேனை நான் என்னும் முனைப்புடனே என்னையறியும் இயல்பும் என்பாலில்லை. பகலாவதும் இரவாவதும் அறிகிலேன். இது அறிகிலேன் என்ற கையோடு பாடுகிறவர் இடையே தம்மை இவ்வாறு செய்தவன் யாரும் அல்ல மனவாசகங் கடந்தான் என்று கூறினால் இவை இரண்டும் எப்படி ஒரு பாடலில் இடம்பெறுகின்றன. இதுதான் அடிகளாரின் தனிச்சிறப்பு. பித்தன் என்ற நிலையில் உள்ள ஒருவர் நான் எனது பகல் இரவு என்பவற்றை அறியவில்லை என்று எப்படி சொல்ல முடியும்? ஒன்று எதுவும் அறியாத நிலையில் இருக்க வேண்டும். இல்லை அறிவின் துணை கொண்டு இவற்றை அறியும் நிலையில் இருத்தல் வேண்டும். இறையருளில் மூழ்கி இருக்கும்போது

---

*தூய்மையான உள்ளம் உடையவர்களைக் கொண்டுதான் இறைவன் தமது காரியங்களைச் செய்து கொள்கிறான்*

மனம் பெற்ற மகிழ்ச்சி, உள்ளம் பெற்ற ஆனந்தம் உடம்பு பெற்ற இன்பம் மூன்றையும் விரிவாக அடிகளார் பாடுகிறார். பேருவகை அளிப்பன.

வினைக் கேடரும் உளரோ பிறர் சொல்லீர் வியன் உலகில்
எனைத் தான் புகுந்து ஆண்டான் எனது என்பின் புரை உருக்கிப்
பினைத்தான் புகுந்து எல்லே பெருந்துறையில் உறை பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான் மறு மாற்றத் திடையானே.

திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் பெருமான் என்மனத்திடத்தும் கண்ணினிடத்தும் வாக்கின் இடத்தும் இருக்கின்றான். இவன்போல வினைக்கேடர் இவ்வுலகத்தில் வேறொருவர் உளரோ சொல்லுங்கள். என்னை தானே வலிய வந்து ஆணடருளினன். விடவேண்டிய பற்றுக்களை விட்டுவிட்டு பற்ற வேண்டிய பற்றினைப் பற்றி நற்கதியை அடைய வேண்டும் என்று எண்ணுவீர்களாயின் ஓடிவாருங்கள், அறிவொளிசேர் மதியினைச் சூடியருளிய சிவபெருமான் திருப்பெருந்துறையில் வீற்றிருந்தருள்வன் எளியேன் உடலின் கண்ணும் உயிரின் கண்ணும் விட்டு நீங்காது புகுந்து நிறைந்து நின்று அருளினன். மீண்டும் எடுத்துச் சொல்லுகிறேன். வினைகளை எரித்தது முதல் செய்தி, அவரது உடலிலும் உள்ளத்திலும் அவன் புகுந்தது இரண்டாவது செய்தி. மெய்நாள் தொறும் பிரியாவினைகேடா என்றும், ஊனார் உடல்புகுந்தான் உளம் பிரியான் உயிர்கலந்தான் என்றது மூன்றாவது செய்தியாம்.

இனி புகழையும் பொருளையும் மண்ணுலக விண்ணுலக வாழ்க்கையையும் பிறப்பு இறப்புக்களையும் வேண்டேன் விழும்பேன் தூய மங்கலப் பொருளான முழுமுதற்கடவுளை விரும்பாதவரை நான் ஒரு நாளும் தொடமாட்டேன், பெருமான் திருவடிகளைப் போய்ச் சேர்ந்தேன். அவற்றை என் தலைமேற் கொண்டேன். இனிமேல் அவை என்னைவிட்டு அகலுவதற்கும் இசைய மாட்டேன். அந்தத் திருவடியை என் மனத்தினின்றும் வெளியே செல்லவும் விடமாட்டேன் என்ற திருப்பாடலைப் படிப்போமா? இறையனுபவமும் உள்ளத்துணர்வும் கடல் அலைபோல் ஓங்கி மேல்வருகிறநிலையும் அடுத்த வினாடியில் சாதாரண நிலைக்கு வருவதும் அருளாளர்க்கு பொது என்ற உண்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

---

*பொறாமை, சூது, வாது, பொய்மை, ஆணவம், கருமித்தனம் முதலிய கீழான குணங்களை உடையவர்கள் புண்ணியச் செயல்களைச் செய்யும் அருகதை அற்றவர்கள்.*



வைகாசி விசாகத்திலன்று நடைபெற்ற ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஜெயந்தி விழாவில் வெளியிடப்பட்ட 'நிழலின் பின்னே மனிதன்' என்ற நூலின் முதற் பிரதியை வாங்கும் பொழுது.



வைகாசி விசாகத்திலன்று நடைபெற்ற ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஜெயந்தி விழாவில் வெளியிடப்பட்ட 'நிழலின் பின்னே மனிதன்' என்ற நூலின் சிறப்புப் பிரதியை வாங்கும் பொழுது.

# P. KAYILASANATHAN

**B.A.(Cey.) LL.B(Cey)**

Barrister & Solicitor

**உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக......**



குற்றவியல் வழக்குகள்
குடிவரவு, அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள்
மேன்முறையீடுகள்
மனிதாபிமான அடிப்படை விண்ணப்பம்
ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
குடும்ப விவகாரம்
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்


**2401 Eglinton Ave. East, Suite 302**
**Scarborough, ON. M1K 2M5**

**Tel: 416-752-9561**

**Fax: 416-752-7262**

# SVKRK JOTHISHAM

## மீனாஷி இந்துமத சேவை



ஜோதிடமாமணி, சிவாச்சார்யாமணி

**ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத ரெங்கநாதக் குருக்கள்**

இந்துமத குரு, ஜோதிடர், திருமணப் பதிவாளர்

**TEL: 416-570-4763 FAX: 416-847-9744**

Wep: www.svkrkjothisham.com
E-mail: info@svkrkjothisham.com

## நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்

ஞானசுரபி நா. முத்தையா

உறுதியில்லாத காரியத்தைத் தாபிக்காதே என்பது பொருள். நிலையாமை என்றால் என்ன? செல்வம், இளமை, உடல் என்பன நிலையற்றவை என்பதை அறிதலாகும். மெய்யுணர்வென்பது மெய்யான பொருள் எது என்று அறிவினால் ஆராய்ந்து அந்த மெய்ப்பொருளை உயிர் உணர்வது. உயிர் உணர்வது என்பது ஆன்மா அனுபவிப்பது. அறிவு மெய்ப்பொருளை ஆராய்ந்து சொல்லும். அத்துடன் அறிவின் வேலை முடிந்தது. அதன்பின் அந்த மெய்ப்பொருளை உணர வேண்டியது உயிரின் வேலை. அந்த உணர்ச்சி நிலைத்தால் பிறப்பின்மை கைகூடும். அந்த மெய்யான பொருள் எது என்று ஆராய்வதையும், ஆராய்ந்து அறிந்த மெய்ப்பொருளை இடையறாது அனுபவிக்க வேண்டும் என்பதும் நாம் சிந்திக்க வேண்டுவனவாகும்.

நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளவை போல நினைக்கிற அற்பபுத்தி இகழத்தக்கது. நிலையற்ற பொருள்கள் என்பதை அறிந்த பின்னும் அவற்றை நிலையுள்ளவை போல நினைத்துக் கொண்டு காரியங்களைச் செய்கிற கீழான புத்தி போக வேண்டும். அதன் பிறகுதான் ஞானம் ஆரம்பமாகும். ஒருவனுக்கு பெருஞ்செல்வம் வந்து சேருவது கூத்துப்பார்க்கச் சேருகின்ற கூட்டத்தைப் போன்றது. அது தொலைந்து போவதும் அந்தக் கூட்டம் கலைந்து போவதைப் போன்றது. கூத்துப் பார்க்க வருகிறவர்கள் பல இடங்களிலிருந்து ஒவ்வொருவராக வந்து பெருங்கூட்டமாகக் கூடுவது போல செல்வம் சேரும்போது பல வழிகளிலும் சிறுக்ச் சிறுகச் சேர்ந்து பெருஞ் செல்வமாகும். கூத்து முடிந்த உடனே கூட்டம் குபீரென்று கலைந்து விடும். அது போலவே செல்வமும் போகும்போது பல வழிகளாலும் ஒருமிக்கவே போய்விடும். செல்வம் நிலையற்றதாகையால் செல்வம் இருக்கிறபோதே தர்மங்களைச் செய்து விட வேண்டும்.

செல்வோம், செல்வோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதே செல்வம். தரித்திரமும் எப்பொழுதாயினும் ஒரு இடத்தில் தரித்திருப்பதில்லை. ஒரு முறை ஒரு சாது தனது வழியிலே நடந்து கொண்டிருந்தார். வழியிலே பணமுடிச்சு ஒன்று இருப்பதைக்

---

*உலகம் ஞானியால் பல நன்மைகளை அடையும்*

கண்டார். கண்ட உடனே ஆட்கொல்லி இருக்கிறது என்று கத்திக் கொண்டே வந்த வழியே ஓடிக் கொண்டிருந்தார். எதிரே இருவர் இச்செயலைப் பார்த்துக் கொண்டே வந்தார்கள். பணமுடிச்சைக் கண்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். இருவரும் குளிக்கச் சென்றவர்கள். குளித்துவிட்டு இன்று நல்ல சாப்பாடு சாப்பிட வேண்டும் என்று திட்டம் தீட்டினார்கள். ஒருவன் குளக்கரையில் பணத்திற்காகக் காவல் இருக்க மற்றவன் உணவு வாங்கச் சென்றான்.

இருவரும் திட்டம் போட்டார்கள். ஒரே திட்டம் தான். ஏன் மற்றவனுக்குப் பணம் கொடுக்க வேண்டும்? நான் ஒருவனே முழுப்பணத்தையும அனுபவித்தால் என்ன? என்பதே அவர்களுடைய திட்டமாகும். உணவு வாங்கச் சென்றவன் மற்றவனைக் கொல்வதற்காக நஞ்சு கலந்த உணவைக் கொண்டு வந்திருந்தான். மற்றவன் இவனைச் சமயம் பார்த்து நீருள் அமிழ்த்திக் கொல்வதாகத் திட்டம் தீட்டியிருந்தான். இருவரதும் திட்டங்கள் அவர்கள் நினைத்தபடியே கஷ்டமின்றி நிறைவேறி இருவரும் மரணத்தைத் தழுவினார்கள். சாது சொன்ன விடயம்தான் சரி. பணமுடிச்சைக் கண்டு ஆட்கொல்லி என்று கூவிக்கொண்டே ஓடினார். உண்மையிலே அது ஒன்றுக்கு இரண்டாகக் கொலை செய்துவிட்டு, அம்முடிப்பு தேடுவாரற்றுக் கிடந்தது.

பணச் செல்வம் ஒரு இடத்தில் தங்காத இயல்புடையது. அதைப் பெற்றுள்ள போதே உடன் தங்கி உதவக் கூடிய புண்ணியங்களைச் செய்துவிட வேண்டும். செல்வம் நிலையில்லாதது. ஆனால் அதைக் கொண்டு செய்கிற தானதர்மங்களால் வரும் புண்ணியம் நிலைத்திருந்து உயிருக்கு உதவும். செல்வம் உள்ளபோது செய்யும் புண்ணியம் செல்வம் போய்விட்ட பின்பும் தான்போகாமல் உடனிருந்து பயன் தரும். நிலையானது என்று மக்கள் நினைக்கிற நிலையற்ற பொருள் செல்வம் மட்டுமல்ல, மனிதனுடைய இளமையும் நிலையற்றது.

கர்ணமகாராசன் நிலையற்ற செல்வத்தை வந்து கேட்டவர்களுக்கெல்லாம் வாரிவழங்கி நிலையான புகழைத் தேடிக் கொண்டான். கொடைக்குக் கர்ணன் என்று இன்றும் வழங்கப்படுகிறது. யுத்தகளத்தில் உயிர் விடுந்தறுவாயில் தருமதேவதை அவனது உயிர்பிரியாமல் காத்தது. அத்தருணத்தில் ஏழைப் பிராமணனாக

---

*சிவபோகத்தில் திளைக்கும் உயிர்களுக்கு*
*உலகம் விளங்காது*

வந்த ஒருவருக்குத் தனது தரும பலனைத் தாரை வார்த்துக் கொடுத்து அழியாப் புகழ் எய்தினான்.

உணர்ந்து அறியக் கூடியவர்களுக்கு நாள் என்பது ஒன்றைப் போலவே அடுத்தடுத்துப் பல நாட்களாகத் தோன்றிச் சிறுகச் சிறுக உயிரை அறுத்து விடுகிற வாளாகும். மனிதருக்கு விருத் தெரிந்ததிலிருந்து ஒரு நாளைப் போலவே மறுநாளும் தோன்றுகின்றது. ஆனால் ஒவ்வொரு நாளும் இளமை குறைந்து கொஞ்சம் கொஞ்சமாக மரணம் நெருங்கி வருவதை அவர்கள் உணர்வதில்லை. மரம் அறுக்கும் வாளினுடைய கூரிய பற்கள் ஒன்று போல ஒன்றன் பின் ஒன்றாக வந்து சிறுகச்சிறுக மரத்தைத் தேய்த்துப் பிளந்து விடுகின்றன. வாளினுடைய ஒரு பல் மரத்தின் மீது உராய்ந்து விட்டுப் போன உடன் ஓரளவு மரம் தேய்ந்து விடுகிறது. அது போல மனிதனுகசு ஒரு நாள் வந்து போன உடன் அவன் உயிர் ஓரளவு தேய்ந்து விடுகிறது. அதனால் உடலும் நிலையற்றது. இளமை மாறிச் சிறுகச் சிறுக உயிர் தேய்ந்து மரணம் வந்து விடுகின்றது.

உலகிலே உள்ள ஒவ்வொருவருக்கும் மரணகாலம் என்பது ஒன்று உண்டு. அச்சந்தர்ப்பத்திலே புலனைந்தும் பொறிகலங்கி அறிவு அழிந்திட்டு சேடம் மாத்திரம் இழுத்துக் கொண்டு உயிர்கள் அவத்தைப் படுவதை தினமுங் கண்டு கொண்டிருக்கின்றோம். அத்தகைய ஒரு நிலையில் பேச்சுவராதபடி நாக்குக் குளறி மேல்மூச்சு வருவதற்கு முன்னால் புண்ணிய காரியங்களைச் செய்ய முந்திக் கொள்ள வேண்டும். உயிர் பிரியாது அவத்தைப்படுகிற காலத்திலே சிலருக்குத்தானம் கொடுப்பது வழக்கம். அதுவும் மலட்டுப்பசு அல்லது மெலிந்து போன பசுவையே தானமாகக் கொடுப்பார்கள். அங்ஙனம் தானமாகக் கொடுக்கப்பட்ட பசு அந்தணர் வீட்டுக்குச் சென்று சேருவதற்கு முன்னமேயே நிலத்தில் விழுந்து இறந்த சரித்திரங்களும் உண்டு.

உடல் நிலையற்றதாகையால் மரணம் வருமுன் புண்ணியங்களைத் தேடிக் கொள்ள வேண்டும். நாக்கு ஒடுங்குவதும் மேல் மூச்சு விக்குவதும் மரணத்தின் அறிகுறிகள். புண்ணியங்களைச் செய்வதில் தாமதம் கூடாது. ஏனென்றால் நேற்று இருந்த ஒருவன் இன்றைக்கு இல்லாமற் போனான் என்னும் பெரிய இயல்புடையது இவ்வுலக வாழ்வு. அப்படி இந்த உலக வாழ்வு

---

*தூய்மையான உள்ளம் உடையவர்கள் இறைவனை எளிதில் உணர்ந்து விடுகிறார்கள்*

நிலையற்றதாக இருப்பது தெரிந்துங்கூட, அதாவது ஒருநாள் முழுவதுங்கூட உயிரோடிருப்பார்கள் என்பது நிச்சயமில்லாத மனிதர்கள் எண்ணுகிற எண்ணங்கள் ஒருகோடி இரண்டு கோடியல்ல, பற்பல கோடிகள்.

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
என்பது கோடி நினைந்தெண்ணுவன"

என்பது ஔவையின் வாக்கு. எந்தக் கணத்திலும் மரணம் வந்து போக வேண்டிய நிலையில்லா வாழ்க்கையுள்ள மனிதன் கோடானுகோடி எண்ணங்களை எண்ணித்திட்டம் போடுகிறானே என்பதைப் பற்றிப் பலரும் இடித்துக் காட்டியுள்ளனர். ஒரு உடலுக்கும் அதன் உயிருக்கும் உள்ள தொடர்பு சிறிது காலத்திற்குத்தான்.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தம் முட்டையின் ஓட்டை விட்டுவிட்டு அதிலிருந்த பட்சி பறந்து விடுவதைப் போன்றதுதான். கருப்பையிலிருந்து வெளியானபோது முட்டையின் ஓடும் அதனுள்ளிருந்த பறவைக் குஞ்சும்பிரிக்கமுடியாதபடி ஒன்றாகவே இருந்தன. ஆனால் முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்பட்ட பின் அந்த முட்டை ஓட்டைப் பார்த்தால் குஞ்சிற்கும் ஓட்டிற்கும் யாதொரு சம்பந்தமும் இருந்ததாகவே தெரிவதில்லை. அது போலவே உடலைவிட்டு உயிர்போவதுமாகும். உயிர்பிரிந்த பின் அந்த உடல் அழிந்துவிடுகிறது. அந்த உடல் அழிந்தாலும் அதிலிருந்து பிரிந்த உயிர் அழிவதில்லை. அந்த உயிர் இந்த உடலோடு கூடியிருந்தபோது செய்த புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தபடி இன்னொரு உடலிற் புகுந்து கொள்ளும். அதனால் உயிருக்குச் சாவில்லை.

உயிருக்குச் சாவு என்பது தூக்கம் போன்றது. தூங்கி விழிப்பது போன்றது இன்னொரு பிறப்பு. உயிர் அழிவற்றதாயினும் உடல் நிலையில்லாதது. அந்நிலையாமையை உணர்ந்து இந்த உடல் இருக்கிறபோதே புண்ணியங்களைச் செய்தால் இந்த உடலை விட்டு அந்த உயிர் பிரிந்த பின்பு அதற்கு இதைக் காட்டிலும் நல்ல உடல் கிடைக்கும். அல்லது பிறவாமை கிடைப்பினும் கிடைக்கும். இப்படி ஒரு உடலிலும் நிலை கொள்ளாமல் வெவ்வேறு உடல்களில் மாறிமாறிப் புகுந்து கொண்டிருக்கிற உயிருக்கு ஒரு நிலையான இடம் எப்போது கிடைக்குமோ? அந்த நிலையான

---

*ஞானிகள் பலனை எதிர்பாராமல்*
*தொண்டு செய்வார்கள்*

இடந்தான் இறைவனது திருவடியாகும்.

இளமையும் செல்வமும் நிலையில்லாதனவே. இளமையோடும் நாம் நீண்ட நாட்களுக்கு வாழுவோம் என்ற தவறான எண்ணத்தில், செய்ய வேண்டிய நல்ல காரியங்களை ஒத்திப் போடக்கூடாது. ஏனென்றால் கனிகளோடு காய்களும் உதிர்வதைப்போல இளமையிலும் மரணம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

மகன் தன்னைக் கடைசிக் காலத்தில் காப்பாற்றுவான் தனக்குக் கொள்ளி வைத்து ஈமக்கிரியைகள் செய்வான் என்று தந்தை மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறான். திடீரென காட்சி மாறுகிறது. தந்தையே மகனுக்குக் கொள்ளி வைத்து ஈமக்கிரியைகள் செய்த காட்சியையும் ஆயிரக்கணக்கில் பார்க்கின்றோம்.

ஐந்து ஆண்மக்களைப் பெற்ற ஒரு தந்தை. வாழ்க்கையில் அவருக்கு எவ்வித குறையுமில்லை. ஐந்து ஆண்மக்களும் வெளிநாட்டில் நல்ல சம்பாத்தியம். ஐவரும் தந்தைக்கு தனித்தனி ஆயிரம் மாதம் தோறும் அனுப்பி வைப்பர். அதனால் தந்தைக்கும் எவ்வித கவலையும் இல்லை. தந்தை திடீரென இறந்த படியினால் தந்தையின் ஈமச் சடங்குகளுக்கு ஒரு மகனாகிலும் வந்து கலந்து கொள்ள முடியவில்லை.

பெற்றவள் அலறித் துடிக்க பிள்ளையைக் கோரமாகக் கொத்திக் கொண்டு போகும் பயங்கர இயல்புள்ள சாவு, ஆயுள் முடிந்தவர்களைத் தேடியலைந்து கொண்டிருக்கிறது. எனவே, அதன் கோரக் கரங்களிலிருந்து தப்ப வேண்டுமானால் வாழ்நாட்களிலேயே அறப்பணிகளைத் தாமதமின்றி ஆற்ற வேண்டும். நமது ஆயுட்காலத்தை அளக்கும் சூரியன் தவறாது உதித்து நமது வாழ்நாட்களைக் கணக்கிடுவதால் நம்மை அறியாமலேயே மரணம் சம்பவிக்கிறது. அதற்குள் மறுமை இன்பத்தை விரும்பியாவது அறப்பணி ஆற்ற வேண்டும்.

மணமுழக்கம் செய்யும் மணவறையிலேயே பிணப்பறை முழங்கும் இயல்பும் உண்டு. ஆதலின் நிலையாத வாழ்வின் தன்மையை ஆய்ந்து உடனேயே தரும காரியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். தோல் போர்த்த உடலினை இயக்கும் உயிர் என்ற கூத்தன் சென்று விட்டபின் பிணத்தை நாரைக் கட்டி இழுத்தாலும் சரி, நன்றாகச் சிங்காரித்து அடக்கம் செய்தாலும்

---

*ஞானிகள் உலக வேலைகளில் வெறுப்பும் இறையின்பத்தில் நாட்டமும் கொள்வார்கள்*

சரி, நாலு பேர் பழிக்க நடுத்தெருவில் எறிந்தாலும் சரி, எல்லாம் ஒன்றுதான். மழை நீர் மேல் குமிழியாம் மனித வாழ்வு என்பதை ஐயந்திரிபற உணர்ந்து கொண்ட மேதைகளுக்கு ஒப்பானவர் இவ்வுலகததிலேயே எவரும் இல்லை.

அனுமதியின்றி ஒரு குடும்பத்தின் பங்காளியாகப் பிறந்து, அறிவிப்பின்றி தனது கூட்டை விட்டு நெடுந்தூரம் சென்று விட்ட பறவை போல் மௌனமாகவே தனது உயிரிழந்த உடலை உறவினர்களுக்குக் கொடுத்து விட்டுத் திரும்பாமலே சென்று விடுவார்கள்.

முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனாக இப்பிறப்பில் செல்வராக வாழ்கிறோம் என இறுமாந்து, மனை வாழ்வே மாண்புள்ளது என நினைத்து அறப்பணிகளைப் புறக்கணிப்பவன் மீண்டும் மறுபிறப்பில் ஒரு வீட்டின் தலைவாயிலில் மிதிக்கத் தகுதியற்ற தரித்திரனாய் உழல்வான்.

அறப்பணிகளைப் புறக்கணித்து விட்டு பெரும்பொருள் தேடிச் செல்வனாகி விட்டோம் எனச் செருக்கடைந்த நெஞ்சே சாவுக்குப்பின் நீ அடையும் பயன் யாது? பாமரன் வினையின் பயன்களைப் புரிந்து கொள்ளத் திறனற்று வருந்துவான். மேதைகள் பிறவிப் பிணியறுத்து வினைப்பயனை ஆய்ந்து தெளிவர். பெறுதற்கரிய உடலைப் பெற்றதன் கடன், அறப்பணியாற்றுவதே ஆகும். அதன் பலன் கருப்பஞ் சாற்றைப் போல் மறுமையில் இன்பம் பயக்கும். அவ்வாறன்றி அறம் பிறழ்ந்தவரின் உடல் கரும்புச் சக்கைபோல் பயன்படுவதாகும். கரும்பில் உள்ள பயனைப் பெற்று கொண்டவர்கள், அதன் சக்கைகள் எரிக்கப்படும்போது வருந்தார். அதேபோல் உடல் எடுத்ததன் பயனைப் பெற்று மறுமை இன்பத்தை தேடிக்கொண்டவர்கள் சாவு வருவது கண்டு கலங்க மாட்டார்கள்.

இதுவரை கூறிய விஷயங்களை ஆய்ந்து பார்ப்போருக்கு "நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்" என்பது தெளிவாகப் புலப்படும்.

---

*எல்லோரையும் ஏமாற்றி விடலாம் இறைவனை ஏமாற்ற முடியாது.*

*பேராசை என்பது பெரும் வியாதி.*

*அதிகாரத்தால் சாதிக்க முடியாததை அன்பினால் சாதிக்கலாம்.*

*உண்மையான நண்பன் நூறு உறவினர்களுக்குச் சமம்.*

*தாய் தந்தையரைப் போற்றுபவன் எல்லா நலன்களையும் அடைகின்றான்.*

# விசாலாட்சி அம்மையார்

## கிராமம்

இவர் பிறந்த கிராமத்தின் பெயர் குப்பிழான். குப்பிழானைச் சூழ தெற்கிலும் மேற்கிலும் ஏழாலை, வடக்கில் குரும்பசிட்டி, கிழக்கில் புன்னாலைக்கட்டுவன். இக்கிராமம் மண்வளம் நீர்வளம் பக்திவளம் மிக்கது. இக்கிராமத்திற்குத் தனிச்சிறப்புண்டு. சூழவுள்ள கிராமங்கள் அந்நிய மதத்தைத் தழுவி வாழ்ந்தனர். ஆனால் குப்பிழான் தனிச் சைவ சமயம் பொருந்திய முத்தமிழும் சங்கமித்து வாழுகின்ற கிராமமாக இருந்தது. இங்குள்ளோரின் முக்கிய தொழில் கமமாக இருப்பினும் புகையிலைச் சுருட்டு சுருட்டுதல் போன்ற குடிசைக் கைத்தொழில்களும் காணப்பட்டன. குப்பிழானின் நாற்சந்தியுண்டு. கிழக்கே புன்னாலைக்கட்டுவன் செல்லும் பெருவீதியும், தெற்கே சுன்னாகம் செல்லும் பெருவீதியும், மேற்கே மல்லாகம் செல்லும் பெருவீதியும், வடக்கே குரும்பசிட்டி செல்லும் பெருவீதியும் காணப்படுகின்றன. குப்பிழானில் படித்த அறிஞர் இசைவாணர் வாழ்ந்தமையால் குப்பிழானுக்குத் தனிமதிப்பிருந்தது. இனமதப் பிரச்சினையின் பின் புற மதத்தவர் குப்பிழானில் வசித்து நொந்த மக்களை ஏமாற்றிப் படித்தவரிடமிருந்தே காணி விலைக்கு வாங்கி கிறிஸ்தவக் கோயிலைக் கட்டி 2004ஆம் ஆண்டு தொடக்கம் ஆராதனை செய்து வருவது மிகவும் மனவேதனைக்குரியதே. குப்பிழான் முத்தமிழும் சைவமும் வேரூன்றிய செம்மண்ணாக இன்றும் காணப்படுகின்றது.

## பெற்றோர்

இவருடைய தந்தையார் பெயர் சீனியர் சின்னையா. சீனியரின் குடும்பத்தில் நான்கு பெண்பிள்ளைகள். கடைக் குட்டியாகச் சின்னையா பிறந்தமையால் செல்லமாக இளையப்பா என்று பெயரிட்டு அழைத்து வந்தனர். அக்காலத்தில் சீனியர் குடும்பம் புகழ்பெற்ற சைவசமயக் குடும்பமாகையால் சந்நியாசிகள் கூட்டம் தொடர்ந்து வருவார்களாம். அடையா நெடுங்கதவாக சீனியரின் வீடு இருந்தது. இளையப்பா திருமணமாகாது நாற்பது வயதுவரை இருந்தார். பின்னர் அயல் ஊரிலுள்ள கதிரிப்பிள்ளை தம்பதிகளின் மகள் உமையாளைத் திருமணம் செய்தார்.

பலகாலம் குழந்தைப் பேறு கிடைக்கவில்லை. குப்பிளான் சோதி விநாயகப் பெருமானின் அருளால் இக்கட்டுரையாளர் 1931 ஆம் ஆண்டு மலர்ந்தார். இவருக்கு அடுத்து ஒரு பெண்ணும் ஒரு

ஆணும் பிறந்தனர்.

இளையப்பாவின் இளமைக்காலத்தில் குப்பிழான் காசிவாசி செந்திநாதையரின் தந்தை சின்னையா ஐயர் அயலிலுள்ள சோதிவிநாயகர் ஆலயத்தின் பூசகராக இருந்தார். அவரின் மனைவியார் பெயர் விசாலாட்சி. கணவனைத் தெய்வமாக வணங்கும் பத்தினிப் பெண். இளையப்பாவில் நல்ல பிரியம் உள்ளவர். இளையப்பா சின்னப்பையன். குணசாலி சொல்வழி கேட்பவர். சின்னையா ஐயர் அவர்கள் குப்பிழானில் உள்ள பல ஆலயங்கட்கும் அழைத்துச் செல்வராம். குப்பிழானில் பல குறிச்சிகள் அதாவது சிற்றூர்கள் பல உண்டு. ஒவ்வொரு சிற்றூரிலும் ஒவ்வொரு சிறுதெய்வங்கள், அதாவது வைரவர், காளி, வீரபத்திரர், கன்னிமாரென விரல்விட்டெண்ண முடியாத கோயில்கள் இருந்தன. இதனால் குப்பிழான் வாசிகள் பேச்சுத்தமிழ் மூச்சுச் சைவம். நெற்றியில் திருநீறு பட்டை பட்டையாகச் சாந்துபோலப் பூசியிருப்பர்.

**ஆரம்பக் கல்வி**

குப்பிழானின் சிறப்பை அக்காலத்தில் ஆலயங்களும் சனசமூக நிலையமும் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயமும் பறைசாற்றிக் கொண்டிருந்தன. அக்காலத்தில் தனியார் மனேஜரின் கீழ் இவ்வித்தியாலயம் இருந்தபோது தூர உள்ள கிராமவாசிகளின் பிள்ளைகளும் இங்கு வந்து கல்வி கற்றனர். சிறந்த பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்கள் கடமை ஆற்றினர். அக்காலத்தில் பாலர் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை. இக்கட்டுரையாளரான விசாலாட்சிக்கு அப்போது நான்கு வயது நல்ல நாளில் அந்தப் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டாள்.

வாசிப்பிலும் கணிதத்திலும் மிகவும் திறமையாக இருந்தாள். பழக்கவழக்கம் முதலியவற்றிலும் பண்பு கலாச்சாரம் என்பவற்றிலும் சுட்டிதான். அவளின் ஏழாவது வயதில் நான்காவது வகுப்பில் சேர்க்கப்பட்டுப் படித்தாள். புலமைப்பரிசுக் கல்விக்குரிய தகைமைகள் அப்போது காணப்பட்டது.

நோய்வாய்ப்படுதல்

அவள் தனது வயதுக்கு மீறிய தகுதியுடன் கல்வி கற்றது யாருக்கும் பிடிக்கவில்லையோ அல்லது கிரகங்களின் கோளாறோ சிறு காய்ச்சலாகத் தொடங்கி ஆளைக் குடிக்கும் சன்னிக்காய்ச்சல் என்ற கொடிய பிணி பீடித்தது. அது ஒருவருடமாக இருக்கவே

நன்றாக மெலிந்து நடக்க மாட்டாத நிலையை அடைந்தாள். இதனால் அவளின் பள்ளிப் படிப்பு நிற்பாட்டப்பட்டது. வீட்டில் வறுமை நிலை. விசாலி படிக்க வேணும், பள்ளிக்கூடத்திற்குப் போகப்போறேன் என்று அழுதபடி. வீட்டில் வறுமைப்பிணி தாண்டவமாடத் தொடங்கியது.

**மீண்டும்**

ஒருவாறு அவளின் நோய் நீங்கி உடம்பில் தெம்பு கிடைத்து வயதும் பன்னிரண்டைக் கடந்து விட்டது. ஆனாலும் என்னைப் படிக்க விடு என்று கதறிக் கொண்டே இருந்தாள். அப்போது மதமாற்றக்காரர் அங்கு வந்தனர். பிள்ளையை எங்கள் சமயத்தில் சேருங்கள். நீங்களும் சேருங்கள், நாங்கள் உணவிற்குக் காசும், பிள்ளை படிக்க வசதியும் செய்வோம் என்றனர். பெற்றார் அவர்கள் பேச்சை மறுத்தனர். விசாலியை மீண்டும் படித்த பாடசாலையில் படிக்கவிட்டனர். விசாலியின் திறமையால் அப்பாடசாலையில் எட்டாம் வகுப்புவரை படித்தாள்.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் கிடைத்தாண்டென நினைக்கிறேன். விசாலிக்குப் பதினேழு வயது. படிக்கவேண்டா மெனப் பெற்றோர் பிடிவாதமாக மறித்து விட்டார்கள். விசாலி பழையபடி ஒப்பாரி தான். வயது போன கிழடி சிறுசுகளுடன் படிக்க வேண்டுமாம் இவள். கல்விக்கு வயதெல்லை இல்லை படிக்கவிடு என அயலிலுள்ள ஆங்கில ஆசிரியை மிஸ். பவளம் கூறிப் படிக்கப் பெற்றாரிடம் அனுமதி பெற்றார்.

விசாலியின் குடும்பம் வறுமைக்கோட்டில். இக்காலம்போல அக்காலத்தில் இலவசப் உடுப்பு, இலவச புத்தகங்கள் கொடுப்ப தில்லை. ஒருவாறு புன்னாலைக்கட்டுவன் ஆங்கிலபாடசாலையில் ஆங்கிலம் படிக்கச் சென்றாள் விசாலி. எல்லாப்பாடமும் ஆங்கிலம். தமிழ் மட்டும் தமிழில். கிறிஸ்தவப் பாடசாலை. அதனால் யாரும் பாடசாலைக்கு நெற்றியில் விபூதி பூசிக் கொண்டு சென்றால் போதும் தலைமை ஆசிரியரின் தலைக்கு மேல் கோபம் வந்துவிடும். விசாலி இங்கே வா திருநீற்றை அழி அல்லது அடி என்று பிரம்பை ஓங்கினார் தலைமை ஆசிரியர். நன்றாக கை உளையும் மட்டும் அடியுங்கோ நான் சிவனை நினைத்துப் பூசிய விபூதியை அழிக்கமாட்டேன். இன்றைக்கு மட்டும் விட்டு விடுகிறேன் இனிமேல் விபூதி பூசி வரக்கூடாதென்றார் அதிபர்.

ஒருவாறு ஆங்கில் J.S.C. சித்தியடைந்த பின், தமிழ் S.S.C ஏழாலை அரசினர் பாடசாலையில் படித்து 1952ஆம் ஆண்டில்

சித்தியடைந்தார். எண்கணிதம், தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், சைவசித்தாந்தம், சைவசமயம், சுகாதாரம், சித்திரம், சரித்திரம், ஆகிய பாடங்களில் விசேட சித்தியும் எண்கணித பாடத்தில் திறமைச்சித்தியும் பெற்றார். எனினும் ஆசிரியத் தொழில் எடுக்க முயற்சி செய்தார். இக்காலத்தில் தாயார் அமரத்துவம் அடைந்தார். சகோதரன் சிவதொண்டனில் சிலகாலம் மகாசமாதியடைந்த செல்லத்துரைச் சுவாமிகளுடன் இருந்து படித்தார். அப்போது செல்லத்துரை சுவாமிகட்கு வயது நாற்பத்தைந்து தம்பியாருக்கு பதினேழு வயதிருக்கலாம். விசாலி தொண்டர் ஆசிரியராகவும், காரைநகர் வக்தாக் கல்விப் பாடசாலையில் படிப்பித்துக் கொண்டு அனாதை மாணவர்க்கு மேற்பார்வையாளராகவும் இருந்தார். அக்காலத்தில் பிரவேச பண்டிதர் பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தார். பிரசங்கம் செய்யும் ஆற்றலையும் பெற்றார். பல பிரசங்கங்கள் செய்து பாராட்டுக்களும் பெற்றார்.

- தொடரும்


# R & S AUTO SALES

**Top Quality New & Used Cars**

**வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்**


RADHA

**TEL: 416-412-3838**
**FAX: 416-412-1174**

**4362 Sheppard Ave. East,**
**Scarborough, ON.**
**Between Brimley & Midland**

# ஆத்மஜோதி வெளியீடு

**நா. நடேசன், இளைப்பாறிய அதிபர்**

திரு. க. இராமச்சந்திரா அவர்களும், திரு. நா. முத்தையா அவர்களும் சத்சங்கத் தொடர்பினால் தமக்கிடையே இருந்த ஆன்மீக உறவை வளம் படுத்தி வந்த வேளை திரு. இராமச்சந்திரா வீட்டில் நடைபெறும் பகவான் அரவிந்தரின் ஜயந்தி விழாவிற்கு வருமாறும் அதில் 10 நிமிடங்கள் பேசுமாறும் கடிதத்தின் மூலம் திரு. முத்தையாவிற்கு அழைப்பு வந்தது. அதனை ஏற்று அங்கு சென்ற முத்தையா அவர்களுக்கு ஆத்மஜோதி என்ற பெயரில் மாத வெளியீட்டை நாம் நடத்தலாம் அதற்குத் தான் கௌரவ ஆசிரியராக இருப்பதாகவும் முத்தையா அவர்களை நிர்வாக ஆசிரியராக இருக்குமாறும் அப்போதே பணித்து விட்டார் இராமச்சந்திரா அவர்கள்.

அரவிந்தரின் ஜெயந்தி விழாவின் போது பேசிக் கொண்ட விடயம் செயலுருப்பெற ஆரம்பித்தது. பத்திரிகை நடத்துவதில் அப்போது எவ்வித அனுபவமும் பெற்றிராத திரு. முத்தையா அவர்களிடம் அங்கத்தவரை சேர்த்தல், உரியகாலத்தில் செய்தி வெளியிடல். ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. முழுப்பொறுப்பையும் திருவருளில் ஒப்படைத்து விட்டுச் செயலில் இறங்கினார். சமரசமான பத்திரிகை ஆகையால் முகப்புப்படம் சிவனொளிபாத மலையாக வருதல் பொருத்தமான தென்றும் கருதப்பட்டது. அந்த நிமிடமே வேலையும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இவர் வீடு வந்துசேர்ந்த அடுத்த நாளே ஆத்மஜோதி பற்றிய ஆலோசனைகளும் ஆக்கங்களும் அனுப்பத் தொடங்கி விடடனர். அன்பர்களினுடைய ஆத்மீகப் பிரவாகம் முத்தையா அவர்களின் நெஞ்சக் கல்லில் விழுந்து உலகிற்குப் பாயவேண்டும் என இறைவன் கருதியுள்ளான் போலும். அன்பர் விரும்பியபடி இறை ஆசியுடன் 1948ம் ஆண்டு திருக்கார்த்திகை தினத்தன்று முதலாவது ஆதம்ஜோதி மாத சஞ்சிகை முகிழ்ந்தது.

மாதந்தோறும் ஒவ்வொரு மகான்களின் படத்தையோ அல்லது திருத்தலங்களின் படத்தையோ முகப்பில் தாங்கியதாக உள்ளே அது பற்றி ஆசிரியரின் சிறந்த கட்டுரைகள், விசேடகட்டுரைகள் என்பவற்றைத் தாங்கியதாக வெளிவர ஆரம்பித்தது. ஆரம்பத்தில் 3 ரூபா வருட சந்தாவாகவும் 75 ரூபா ஆயுட் சந்தாவாகவும் ஆரம்பிக்கப்பட்டது. ஆத்மஜோதி சஞ்சிகை ஆரம்பத்திலேயே கொழும்பிலிருந்து பல சந்தாதாரர்கள் சேர்ந்து விட்டனர். ஒரு சில மாதங்களில் இவர்களின் எண்ணிக்கை 2000மாக

இருந்தது இது அப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு உறுதியான அடிக்கல்லாக அமைந்தது. இவ்விரண்டாயிரம் பத்திரிகையையும் குறைந்தது இருபதாயிரம் பேர் வாசிப்பார்கள் என்ற நம்பிக்கை மேலும் அவரைச் செயலில் தூண்டியது.

பல்வேறு பகுதிகளில் இருந்து பல அன்பர்கள் பல உதவிகளும், பொருள் உதவியும் தாமாக விரும்பி வழங்க முன் வந்தனர். ஒரு முறை இவர் பதுளைக்கு சந்தாவிற்கு ஓர் அம்மையாரிடம் சென்றபோது அவர் ஒரு தங்கப்புவுணை வழங்கினார். இது பற்றி அவர் ஆத்மஜோதி வெள்ளி விழாச் சிறப்பு மலரில் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் பல மகான்களின் ஆசியும் அன்பர்களின் தெளிந்த உள்ளமும் ஆத்ம ஜோதியின் நிலையான சொத்தாக அமைந்திருந்தது.

ஈழத்திலும் பாரதத்திலும் பல மகான்களின் செயல்கள் அவர்களின் வாழ்வு என்பன சராசரி மக்கள் அறியமுடியாத நிலையில் அருமையானவையாக இருந்து வந்த வேளை இப்பத்திரிகை அவர்களினுடைய வரலாறுகளை குன்றின் மேலிட்ட விளக்காக அனைவருக்கும் தெரியப்படுத்தும் ஓர் பாரிய பணியில் ஈடுபட ஆரம்பித்தது. இதற்கு உறுதுணையாக இருந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் ஞானிகள் யோகிகள், துறவிகள் ஆத்மீக வாதிகள், சமயப்பெரியோர்கள் எனப்பலரும் இத்தகைய வரலாறுகளை அனுப்பி வைத்தனர். ஆத்மஜோதியின் கௌரவ ஆசிரியரான இராமச்சந்திரா பத்திரிகையில் தெரிந்தோ தெரியாமலோ நடைபெறும் ஒரு சிறுபிழைகூடப் பொறுக்க மாட்டாதவர். உடனே கடிதம் அனுப்புவர். அங்கு வேலை செய்யும் ஏனையோர் தவறை தாமே ஏற்றுக்கொள்வர். ஒரு போதும் மனஞ் சோர்வதில்லை. காந்தி அடிகள் தன்னையும் அறியாத சக்தியொன்று தன்னை வழிநடத்துவதாகக் கூறுவது போன்றே இவருடைய பணியும் தொடர்ந்து நடைபெற திருவருட் சக்தி தோன்றாத் துணையாக நிற்பதாகக் கூறுவர்.

1960ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து ஆத்மஜோதிக்கு சொந்தமாக அச்சு இயந்திரம் கிடைத்தது. அச்சுக் கூடத்தை திரு. க. இராமச்சந்திரா முன்னிலையில் சுவாமி சச்சிதானந்தா திறந்து வைத்தார். பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) முத்தையாவின் தம்பி திரு. அருமைநாயகம் போன்ற பல பெரியார்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். இதே ஆண்டு ஆத்மஜோதி அவர்களின் திருமுறைக்காட்சி என்ற நூல் இதன் முதலாவது பதிப்பாக வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து பலநூல்கள் வெளிவந்தன.

ஜோதி என்பதற்கு பிரகாசம், ஒளி, வெளிச்சம் என்பன போன்ற பொருட்கள் கொள்ளப்படுகின்றன இருளை அகற்றி ஒளி தருவது ஜோதி. ஆன்மாக்களின் அறியாமையாகிய அக இருளை அகற்றி அறிவாகிய ஒளி தருவது ஆத்மஜோதி ஆகும். நம் ஆத்மா கடைத்தேறும் வகையில் நல்ல உபதேசங்களைப் புரிந்து வாழ வைப்பது குருவருள் ஆகும். அத்தகைய குருவருளும் திருவருளும் ஒருங்கிணைந்த உயர் குணத்தவரான திரு. முத்தையா அவர்கள் இவ் அற்புதம் வாய்ந்த தெய்வீக ஆன்மீக சமய, இலக்கிய, மொழி, கலை கலாச்சாரத் துறைகளில் ஆன்மநேய ஒருமைத்துவத்தினை உணர்த்தி மக்களின் வாழ்வினை வாழ்விக்க வல்ல அரிய கருத்துக்களின் கருவூலங்கள் சுடர்விட்டு ஒளிரும் அரிய பெரிய தத்துவங்களை இதனுள் அடக்கியதாக இம்மலரை வெளிப்படுத்த முழு ஆர்வம் கொண்டிருந்தார்.

எமது மனமானது காம குரோத லோப மோக மத மாட்சரியங்களைத் சேர்க்கின்ற குப்பைத் தொட்டியாக உள்ளது. இத்தகைய குப்பைகளை நீக்கி அதனைத் தூய்மைபடுத்துவதே ஆத்ம சாதனம் ஆகும். அதற்கான வழி ஆன்மீக ஈடுபாடு கொண்டிருப்பதாகும். இத்தகைய ஈடுபாட்டால் எமது சித்த விகாரங்கள் நீங்கிவிடும். சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எம்மையெல்லாம் ஆண்டு கொள்வான் அத்தன் என்பது மணிவாசகரின் திருவாசகம். இத்தகைய உலக மக்களின் மலம் நீக்கும் சிவஜோதியாக ஆத்மஜோதி வலம்வந்து கொண்டிருந்தது.

'அருட்பெருந் ஜோதி அருட்பெருந்ஜோதி தனிப்பெருங் கருணை அருட் பெரும்ஜோதி' என்கிறார் இராமலிங்க அடிகளார். இத்தகைய மாசற்ற அருட்பெரும் ஜோதியாக மலர்ந்த மலர்ச்சோதியாக ஆத்மஜோதி ஆயிரமாயிரம் உள்ளங்களில் படிந்து ஆத்மீகத்தின் அர்த்தத்தை தெளிவுபடுத்தி சாத்வீகமான குணநலங்களை மக்கள் மத்தியில் வளர்த்து வந்தது.

இப்பத்திரிகையில் வெளிவந்த பெரும்பாலான சமயக்கட்டுரைகள் அறிவுரைகள் இளம்பிராயத்தினரை பெரிதும் கவர்ந்தன. இலகுவில் பொருள் விளங்கக் கூடியதான பல்வேறு விடயங்கள் அவர்களை நற்குண நற் செய்கை உடையவராக வளர்த்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி காட்டின. ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாகிய மோட்சத்தை அடைவதற்கான மார்க்கத்தை காட்டுவதாகவும் இந்நூல் அமைகின்றது.

இன்றைய காலத்தில் எங்கு பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் கலப் படமாகிவிட்டது. கலப்படமற்ற சுத்த நன்னெறியில் நிற்போர் மிகமிக அரிதாகி விட்டனர். அத்தியாவசியப் பொருட்கள்

ஆடம்பரப்பொருட்கள் மட்டுமின்றி கட்டுரைகள், கவிதைகள், திரைப்படங்கள் அனைத்திலும் கலப்படம், அறிவு, பக்தி, ஞானம், போன்றவற்றை போதிக்கவேண்டிய பக்திச்சுவை நிறைந்த பத்திரிகைகள், நூல்களிற்கட உலகியல் சிற்றின்ப விடயங்கள் கலக்கப்படுகின்றன. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விசம் போல் அந்நூல்களிலுள்ள ஏனைய முழு விடயங்களையும் இத்தகைய சிற்றின்ப உணர்வுகள், எழுத்துக்கள் கெடுத்து விடுகின்றன.

இத்தகைய ஒரு சூழலில் சத்தியம், தர்மம், அன்பு, அகிம்சை சாந்தி போன்ற மனிதமேம்பாட்டு விழுமியங்களைப் போதித்து கலப்படமற்ற ஒரு சஞ்சிகையாக நீண்ட காலம் ஆத்மஜோதி நிலைத்து நின்றிருக்கின்றது.

ஈங்கோமலை சுவாமி அத்வாயனந்த சரஸ்வதி திரு. முத்தையா அவர்களின் மணிவிழாவின் போது:

"ஆத்மஜோதி திங்கள் மலர்கள் கலப்படமற்ற பரிசுத்தமான பக்தி, அறிவு, ஒழுக்கங்களைத் கற்பிக்கின்றன. சிறப்பாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் படி தமிழ் தெரிந்த எல்லாத் தேசங்களும் ஏன் சுவர்க்கத்திலும் கூட இவற்றை வெற்றிகரமாக பரப்பி வருகின்றனர் என்று குறிப்பிட்ட கருத்து இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது.

எத்தனையோ இடர்ப்பாடுகள் இடுக்கண்கள் எதிர்ப்புக்கள் பொருள் இழப்புக்கள் மத்தியிலும் உறுதியான நம்பிக்கையுடன் ஆத்மீக பலத்துடனும் ஆர்வம் சிறிதும் குன்றாமல் நீண்ட காலம் நிலைத்த பத்திரிகை இது. இதனுடைய நீண்ட கால நிலைப்புப்பற்றி மாத்தனை அருணேசர் என்ற பெரியார் "சமயப் பணி செய்யும் வகையில் வெளிவரும் எந்த பத்திரிகையும் இத்தனைகாலம் இடைவிடாது நடந்து வருவது இலங்கையில் எங்குமே கிடையாது. ஆத்மீகம் சம்பந்தமான பல அரிய கட்டுரைகளை மாதந்தோறும் தாங்கிவரும் இச்சஞ்சிகை திரு. நா. முத்தையா அவர்களின் தளராத ஊக்கத் தினாலும் உழைப்பினாலும் இவ்வாறு நிலைபெற்று வளர்ச்சி அடைந்துள்ளது" என்று குறிப்பிடுகின்ற கருத்து எமது கருத்திற்கு வலுச்சேர்க்கின்றது.

இவ்வாறாக ஆத்மஜோதி என்ற அருமையான பெயரைத் தாங்கிய மாதாந்த சஞ்சிகை சாதாரண மலர்களாயும் சில சிறப்பு மலர்களாயும் வெளிவந்து இலங்கையில் மட்டுமின்றி கடல் கடந்து வாழும் கன்னித்தமிழ்நாடு உட்பட பல நாட்டவரிடையேயும் மனிதநேய ஒருமைப்பாட்டினையும், உயர் பண்பினையும், பக்தியையும், சத்தியத்தையும் சமாதானத்தையும் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், போதிக்கின்ற உள்முக நற்றொண்டில் 1983வரை 36 ஆண்டுகள் பல பாகங்களிலும் வலம் வந்த வரலாற்று



சிறப்பு வாய்ந்தது. இதன் கலைச் சிறப்பும், கவின்மிகு எழிலும் ஏற்றம் மிகு நற்புகழும் என்றும் மறையாது நிலைத்து நிற்கும் பெற்றி வாய்ந்தது.

ஆத்மஜோதியின் திக்குவிஜயம் முத்தையா என்ற பெயரை மறைத்து ஆத்மஜோதி என்றால் முத்தையா என விளங்கவைத்தது. ஆத்மீக தாகம் உடையோர்க்கு இது ஒரு நல்விருந்தாக இருந்து வந்தது. இதனால் இவர் பெயர் பிரசித்தம் ஆயிற்று. பலர் இவரை மொய்த்தனர். பல இடங்களாலும் சொற்பொழிவிற்கும் மகாநாடு களுக்கும் அழைப்புக்கள் வந்து கொண்டு இருந்தன. இவரும் சென்று கொண்டே இருந்தார். அறையில் இருப்பவற்கு அறைதான் தெரியும். மலையில் ஏற்றினால் கண்பார்வைக்கு எட்டிய தூரம் தான் தெரியும். ஆத்மஞானத்தில் ஏற்றிவிட்டால் உலகம் முழுவதேமே அகஞானத்தால் கண்டு கொள்வர். இப்போ ஆத்மஜோதியால் முத்தையா உலகத்தை அறிந்தார். உலகம் முத்தையாவை அறிந்தது. அவர் பணி வளர்ந்தது.


**FASHION FLORIST INC.**

**பாஷன் பூக்களஞ்சியம்**

**பாபுவின் கைவண்ணத்தில்**
**பூக்கள் மாலையாகின்றன**



**416-754-8282**

**4400 Sheppard Ave. East, Unit 5**
**Scarborough, ON.**

சிவமயம்

# சைவப்பெரியார்
# திரு. அ. தில்லையம்பலம் J.P.
## அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்

(முன்னாள் ‘சிவதொண்டன்’ ஆசிரியர், செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B.O.L, Dip Ed. எழுதியது.)

சங்கரத்தையூர் ஒரு தவஞ் செய்த ஊராகும். அங்கு 1897ஆம் ஆண்டு செப்டம்பர் மாசம் 24ஆம் திகதி திரு. அம்பலவாணர் அவர்களுக்கும் அவர்தம் பாரியார் தையல்நாயகிக்கும் திரு. திலலையம்பலம் அவர்கள் மகவாய் உதித்தார்கள். திரு. தில்லையம்பலம் அவர்கள் முயற்சி திருவினையாக்கும் என்னும் முதுமொழிக்கிணங்க மிக்க இளம் பிராயத்திலேயே முயற்சியின் மேன்மையை முழுதும் உணர்ந்தோராய் வாழ்க்கையை ஆரம்பித்தார். தமது 17வது வயதிலேயே, அ∴தாவது 1915ஆம் ஆண்டிலேயே இரத்தினபுரிப் பகிரங்கப் பகுதிக் காரியாலயத்தில் நல்ல சம்பளத்தோடு உத்தியோகம் பெற்றார். 1923ஆம் ஆண்டு நகர ஓவசியராக (Town Overseer) நியமனம் பெற்றார். அப்போது இவருக்கு வயது 24. இத்தகைய இளம் வயதிலேயே, ஒரு மாகாணத் தலைநகருக்கு நகர ஓவசியராக நியமனம் பெற்றவர் இலங்கையில் இவர் ஒருவரே ஆவர். ஒழுக்க சீலராய்க் கடமையிற் கண்ணாயிருந்து கடமையாற்றிய இவர்களைச் செல்வம் தானாக வந்தடைந்தது.

“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை” - குறள் 594 என்பது பொய்யா மொழியன்றோ? அந்நாட்களில் இவர் நாளொன்றிற்கு 12 மணிக்குமேல் பணியாற்றி வந்தார் என்பதை அறியும்போது இவர் தம் கடமையுணர்ச்சி எத்தகையது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். உழைப்பால் உயர்ந்ததோடு அமையாமல், உத்த மனாகவும் உயர்ந்த இவரது பண்பு, உழைத்துயர்ந்த உலகமதில் ஒரு தனிப்பெரும் சிறப்பாகும்.

---

*தாய் தந்தையரை அலட்சியப் படுத்துபவர்*
*நரகத்தை அடைகிறார்கள்*

**சிவதொண்டு**

செல்வராகி விடுவதால் மட்டும் ஒருவர் பெரியாராகிவிட முடியாது. திரு. தில்லையம்பலம் அவர்களது பெருமை அவர்களது சிவபக்தி, சிவதொண்டு, தருமசிந்தை, பெரியோரைத் துணைக்கோடல், தயாளகுணம் முதலியவற்றாற் சிறந்தது. "அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியோரைப் பேணித் தமராக் கொளல்" என்றாங்கு பெரியோரைத் துணைக்கொள்ளும் பெரிய அறிவு படைத்தவராய், 1925ஆம் ஆண்டு தொடக்கம் ஈழத்துச் சிவஞானச் செல்வராகிய எங்கள் குருபரன் சிவத்திரு. சிவயோக சுவாமிகளது அருளுக்குப் பாத்திரமானார். சிவயோகசுவாமிகள் பல வருடங்கள் தோறும் அடிக்கடி இரத்தினபுரிக்குச் சென்று திரு. தில்லையம்பலம் அவர்களோடு தங்கி இருந்து,

"அங்கும் இங்கும் எங்கும் உள்ளானே
அரிய ரத்தினபுரியானே" என்றும்

"தில்லையம்பலம் என்றொரு தலமிருக்குதாம்
அது கண்டபேர்க்கும் கருணை புரிகிதாம்" என்றும்

பாடிப் படித்து, அங்கு அருட்செயல்கள் பல புரிந்ததும் பலரும் அறிந்தவையே. ஸ்ரீ சங்கரசுப்பைய சுவாமிகளிடமும் இவர் பெருமதிப்பும் பத்தியுமுடையவராய் இருந்தார். இப்பெரியார்கள் காட்டிய வழியிலே நின்று சிவப் பணிகளைச் செய்து வந்தார். இரத்தினபுரியில் விளங்கும் சிறந்த சிவன்கோயில் பெரும்பாலும் இவரது பணவுதவியும் நன்முயற்சியும் கொண்டே அமைவதாயிற்று.

சிவயோகசுவாமிகள் மீது இவர்களுக்கிருந்த பக்தி அளப்பரியது. சுவாமிகளின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராய்க் கடைசிவரை இருந்து சுவாமிகளின் குறிப்பறிந்து நடந்துவந்த பக்த சிரோமணியாய் இவர்கள் விளங்கினார்கள். 'சிவதொண்டன்' வளர்ச்சியில் அதன் ஆரம்பகாலந்தொட்டே கண்ணுங்கருத்து மாயிருந்து வந்தார்கள். சிவதொண்டன்சபை நிறுவப்படலாயிற்று. சிவதொண்டன் நிலையம் நிறுவுவதில் இவர்கள் எடுத்துக் கொண்ட ஊக்கமும் செய்த உதவியும் யாவராலும் பாராட்டப்பெற்று வந்தன. சிவதொண்டன் சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுப் பணியாற்றி வந்தார்.

திருக்கேதீச்சரத்தில் சுவாமி கோயிற் கோபுரத்

---

*உலக இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்காக கடவுளை வணங்குவது பக்தி இல்லை*

திருப்பணிக்கென முதல் உதவியாக இவர்கள் காசோலையாக 10,000 ரூபாவை சேர் கந்தையா வைத்தியநாதனிடம் ஒப்படைத் தார்கள். அத்திருப்பணி செவ்வனே நடைபெறுவதற்கு இவர்கள் பேரூக்கம் எடுத்து வந்தார்கள். இதுபோலவே சிலாபத்திலுள்ள முனீஸ்வரர் ஆலயத்தில் 63 நாயன்மார்களது சிலைகளைப் பிரதிட்டை செய்வதற்கு நடைபெற்ற பணிக்கு முதல் உதவியாக ரூபா 1008 ஐ உபகரித்தார்கள். இவர்களது உதவி வண்ணை யிலுள்ள சைவ பரிபாலனசபை அகில இலங்கை சேக்கிழார் மன்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, மற்றும் இதேபோல் ஈழநாட்டிலுள்ள பல்வேறு சைவ தாபனங்கட்கும் கிடைக்கலாயிற்று.

1942ஆம் ஆண்டு இவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வேலை மாற்றம் பெற்று வந்தார்கள். அதனால் இங்கும் பல தொண்டுகளை இவர்கள் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. தமது சொந்த ஊராகிய சங்கரத்தையில், பத்திரகாளி அம்மன் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெற்று வந்த உயிர்ப்பலியை நீக்குவதற்கு அரும்பாடுபட்டார்கள். பிரசாரஞ் செய்தார்கள், ஈற்றில் அங்கு உயிர்ப்பலி செய்யும் வழக்கத்தை நிறுத்தினார்கள். இவ்வாலயத் திருப்பணிச் சபைக்கும் தலைவராக இருந்து புனருத்தாரண வேலைகள் பல செய்து ஒரு சிவாலயமாக விளங்கச் செய்தார்கள். இப்பெரும் பணிகளையெல்லாஞ் செய்து சிவபுண்ணிய சீலராய் வாழ்ந்தார்கள். இத்தனைக்கும் 53 வருடகாலமாக இவர்தம் வாழ்க்கைத் துணைவியாய் அமைந்த அன்பும், பண்பும் பொருந்திய தையல்நாயகி அம்மையாரது நிறைந்த மனமும், பதிபக்தியும் உறுதுணையாய் அமைந்தன.

1960ஆம் ஆண்டில் சமாதான நீதவான் (J.P) பட்டம் இவரைத் தேடி வந்தது. அது கிடைத்ததனால் பெருமகிழ்வடைந்த ஊரவரும், நண்பர்களும், பிறரும் பெருவிழாக் கொண்டாடினர்.

இவர்களுக்கு புதல்வர், புதல்வியர் ஒன்பதின்மர் ஆவர். இன்னும் இவர்களுக்குப் 15 பேரப்பிள்ளைகளும், 4 பூட்டப்பிள்ளை களும் உளர்.

எல்லாவகையிலும் செல்வராக வாழ்ந்த இப்பெரியார் 1974ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி அன்று இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் பாத நீழலையடைந்தார். இவர்களது பிரிவு எல்லோருக்கும் பெருந்துன்பம் விளைத்தது. இவரது இடத்தை நிரப்ப யாருளர்?

---

*தூய்மையான துறவிகளின் பார்வை மட்டுமே*
*பாவங்களைப் போக்கி விடும்*

# ஆத்மீகக் கணக்கு - பாடம் இரண்டு

## Spiritual Mathematics - Lesson Two

**வைத்திய கலாநிதி இ. இலம்போதரன்**

சைவசித்தாந்தரத்தினம் ஆ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லக்கேட்டு ஞாபகப் பதிப்பில் இருந்து எழுதியது டாக்டர் இ. லம்போதரன்

சிவம் என்கின்ற வைப்புச் சக்தியானது (Potential Energy) செயலாற்றாது ஒன்றும் செய்யாது சும்மா இருக்கும். அதிலிருந்துதான் "சிவனே என்று சும்மா இரு" என்ற வாக்கு வந்தது. பௌதிக விஞ்ஞானத்தின் படியும் இது உண்மை. வைப்பு சக்தி வேலை செய்யாது. ஆனால் கடவுள் சும்மாவா இருக்கின்றார்? இல்லை. கடவுள் செயலாற்றுகின்றார். கடவுள் என்ன செயல்களை ஆற்றுகின்றார் சொல்லுங்கள் பார்க்கலாம்.

படைத்தல் - Creation or Genesis - கடவுள் உயிர்களைப் படைக்கின்றாரா? இல்லை. சைவ சமயத்தின்படி கடவுள் உயிர்களைப் படைப்பதில்லை. உயிர்களும் கடவுளைப் போல் தொடக்கம் இல்லாதவை - அநாதி. அப்படியென்றால் கடவுள் என்னத்தைத்தான் படைக்கின்றார்? பின்னர் விரிவாகப் பார்ப்போம். காத்தல் - Preservation or Sustenance - படைத்தவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் வரை நிலை நிறுத்துவது காத்தல் ஆகும்.

அழித்தல் - Dissolution - சைவத்தில் அழித்தல் கிடையாது. ஒடுக்குதல் மட்டுமே. உள்ளது அழியாது; இல்லது தோன்றாது; ஆனால் உருமாறும். இது சைவத்தின் விஞ்ஞான தத்துவம் - சற்காரிய வாதம். ஒன்றையுமே அழிக்க முடியாது. இது எப்படி? அதையும் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

எல்லாச் சமயங்களும் கடவுளுக்கு படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று செயல்களைக் கூறச் சைவம் மட்டும் அழித்தலை வித்தியாசமாகச் சொல்லிக் கடவுளுக்கு மேலும் இரண்டு செயல்களைக் கூறுகின்றது. அவை என்ன என்று பார்ப்போம்.

மறைத்தல் - VEILING கடவுள் என்னத்தை மறைக்கின்றார்? எதற்காக மறைத்திருக்கின்றார். இதையும் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

அருளல் - Grace - மற்றச் சமயங்களும் கடவுளின் அருளைப் பற்றிக் கதைத்தாலும் சைவம் ஒன்றுதான் அருளல் கடவுளின் முக்கியமான செயற்பாடுகளில் ஒன்றாகக் கூறுகின்றது.

சும்மா இருக்கும் சிவம் இவ்வாறு செயல்களை ஆற்ற

முடியாது அல்லவா? அவ்வாறு செயற்படும் சிவத்தின் வெளிப்பாடே சக்தியாகும். இவ்வாறெல்லாம் செயலாற்றுவதற்கு வெளிப்படும் சிவத்தின் இயங்கு சக்தியைத்தான் (Kinetic Energy) நாம் சக்தி என்கின்றோம். இதை பராசக்தி Cosmic Energy என்றும் சொல்லுவார்கள். விஞ்ஞானத்தில் இயங்கு சக்தி என்றால் ஒப்புக் கொள்ளுகிறீர்கள். அதையே சைவ சமயத்தில் சக்தி என்றால் ஒத்துக் கொள்ளுகின்றீர்கள் இல்லையே ஏன்? இரண்டும் ஒன்றுதானே. இன்னொரு விதமாகவும் நோக்கலாம். சிவம் என்பது பேரறிவு அல்லது ஞானம் (Wisdom Personified) சக்தி என்பது அருள் (Grace Personified). அறிவுடன் அருளும்கூட இருக்கும்போதே அது அனுபவிக்கக்கூடியதாகின்றது. இவ்வாறு அண்டப் பேரறிவான சிவத்துடன் அண்டப் பேரருளான சக்திகூட எமக்காக ஐந்தொழில்கள் நடந்தேறுகின்றன.

சிவமும் சக்தியும் இவ்வாறு ஒரே கடவுளின் வித்தியாசமான வடிவங்கள் அல்லது வெளிப்பாடுகள். சிவம் என்பது வைப்பு சக்தி வடிவம். சக்தி என்பது இயங்கு சக்தி வடிவம். சிவம் என்பது அறிவு. சக்தி என்பது அருள். சிவமும் சக்தியும் பிரிக்க முடியாதவை. இதையே சைவ சமயத்தில் ஆண் பாதி பெண் பாதியாக உள்ள அர்த்தநாரீசுவர வடிவில் விளக்கியுள்ளார்கள்.

'ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்' என்று திருமந்திரம் கூறும்.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான் - திருவருட்பயன் - 2


# S & S Engravers

**வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைகேற்ப**

**குறைந்த விலையில்**




Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels,

**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

### 9வது வருடமாக திருமுறை முற்றோதல்

19-04-2008 சனிக்கிழமை 9வது வருடமாக அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் பன்னிரு திருமுற்றோதல் இந்து சமயப் பேரவைத் திருக்கூட்ட அடியார்களினால் ஆரம்பிக்கப்பட்டது.

### திருமுறைக் கருவறை அங்குரார்ப்பண விழா

19-04-2008 சனிக்கிழமை பேரவையினரால் திருமுறைக் கருவறை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பேரவையின் பொதுச் செயலாளரும் திருமுறை முற்றோதல் ஒருங்கிணைப்பாளருமாகிய சிவமுத்துலிங்கம் திருமுறைக் கருவறையை திறந்து வைத்தார்.

### கந்த புராண படன விரிவுரை ஆரம்பம்

20-04-2008 ஞாயிற்றுக்கிழமை அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் கந்தபுராண படன விரிவுரை ஆரம்பமாகியது. பௌராணிகர்கள் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் வைத்திய கலாநிதி இ. சண்முகம் ஆகியோர் புராண படனவுரையை ஆரம்பித்தார்கள். கனடா வாழ் சைவத் தமிழ் மக்களிடையே கந்தபுராணம் ஆறு காண்டமும் முதல்முறையாக புராணபடனவுரை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

### திருநாவுக்கரசு நாயனார் குருபூசை



30-04-2008 அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசை பேரவையின் திருக்கூட்ட அடியார்களினால் வெகுவிமரிசையாக நடத்தப்பட்டது. அப்பர் சுவாமிகளின் பாடல்கள் தெரிந்தெடுத்து பசனை முறையில் ஓதப்பட்டது. தொடர்ந்து கைலாயநாதப் பெருமானுக்கும், அப்பர் சுவாமிகளுக்கும் அபிசேக ஆராதனை நடத்தப்பட்டது.


### பேராசிரியர் டாக்டர் கிருஷ்ண மூர்த்தியின் சொற்பொழிவு

பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திருவாவடுதுறை சைவசித்தாந்த மையத்திலே படித்து சைவசித்தாந்த இரத்தினப் பட்டம் பெற்றவர். தன் நுண்அறிவைப் பயன்படுத்தி சைவ சித்தாந்த



தத்துவத்திற்கு இலகுவான முறையில் விளக்கம் செய்து பரப்புபவர். ஐந்து தடவைகள் திருக்கயிலாய யாத்திரை செய்தவர். தன் 84வது வயதிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உடற்கூற்றுப் பேராசிரியராக கடமையாற்றுபவர். தன் ஓய்வு நேரங்களில் சைவ சித்தாந்த தத்துவத்தை சைவத் தமிழ் மக்களுக்கு மத்தியில் பரப்பிக் கொண்டிருக்கின்றார். டாக்டர் ஆதிகணபதியின் அழைப்பின் பேரில் கனடாவுக்கு வருகை தந்த பேராசிரியர் 12-05-2008 மாலை அருள்மிகு நல்லூர் முருகன் ஆலய மண்டபத்தில் திருக்கூட்ட அடியார்கள், அன்பர்கள், சைவசித்தாந்த ஆர்வலர்களுக்கு மத்தியில் 3 மணி நேரம் சொற்பொழிவாற்றினார். பல ஆர்வலர்கள் கேட்டுப் பயன்பெற்றனர்.

### ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஜெயந்தி விழா



19-05-2008 வைகாசி விசாகத்தன்று பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமி களின் ஜெயந்தி விழா வெகு விமரிசையாக அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் நடைபெற்றது. வழமைபோல இஷ்ட தெய்வநாம ஜெபப் போட்டி சிறார்களுக்கு மத்தியில் நடத்தப்பட்டு பங்கு பற்றிய சிறார்கள் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது. ஆத்ம ஜோதியார் எழுதிய நிழலின் பின்னே மனிதன் என்ற நூலும் வெளியிடப்பட்டன. நூலைப் பிரபல சொற்பொழிவாளர் ஆசிரியை மீனா தவரத்தினம் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

**திருஞானசம்பந்தர் குருபூசை**



02-05-2008 அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் சம்பந்தர் பெருமானின் குருபூசை பேரவையின் திருக்கூட்ட அடியார்களினால் நடத்தப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட சம்பந்தரின் தேவாரங்கள் பசனை முறையில் ஓதப்பட்டது. அபிசேக ஆரா தனைகளும் இடம்பெற்று பிரசாதமும் வழங்கப்பட்டது.

## தமிழகச் செய்தி

### சிதம்பரம் அப்பர் தொண்டு நிறுவன நான்காம் ஆண்டு நிறைவு விழா

சிவமுத்துலிங்கம்
திருமுறைச் செல்வர்

2004ஆம் ஆண்டு கனடாவில் வாழும் சிவமயச் செல்வி பரமேஸ்வரி சரவணைமுத்து அவர்களின் உதவியுடன் அப்பர் தொண்டு நிறுவனம் சிதம்பரத்தில் நிறுவப்பட்டது. அதன் தலைவராக மூதறிஞர் புலவர் ச. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் செயல்ப்படுகின்றார். இவர் 40 வருட காலமாக திருமுறைக் கழக தலைவராக இருந்து சிதம்பர நகரில் அளப்பரிய பணிகளைச் செய்து வருபவர். தன் தள்ளாத வயதிலும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் வாக்குக்கு அமைய தன்னை அர்ப்பணித்து பணி செய்பவர். செயலர் வீ. சந்திர சேகரனும் நல்ல ஒரு தொண்டர். செயல்த் திறமை யுள்ளவர். அப்பர் தொண்டு நிறுவனத்தில் பல தொண்டர்களை செயல்பட வைத்து இயக்குபவர். பாடல் பெற்ற பல சிவ ஆலயங்களில் உழவாரப்பணி மாதந்தோறும், செய்வதையும், சிவபூசை செய்து திருவாசகம் முற்றோதுவதையும் நாம் தென் இந்தியத் திருத்தல யாத்திரை செய்த பொழுது, கண்டு மகிழ்வுற்றோம். அத்துடன் சிதம்பர நகர சுற்றுப்புறக் கோயில்களின் புனர்நிர்மாணப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். மேலும் அவர்களின் பணி சிறக்க, நிறைவுவிழா சிறப்புறவும் எல்லாம் வல்ல ஆடவல்லானை வேண்டி பேரவையின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

# என்னை ஆத்மீகத்துக்கு வழிப்படுத்திய திருவாசகம்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

நாற்பதுகளில் எனக்கு வயது பதினேழு துவக்கம். ஜே.எஸ்.ஸி. பரீட்சை எழுதிவிட்டு பரீட்சை முடிவுக்காகக் காத்திருந்த காலம். எம் வீடுகள் மண் குடிசைகள். ஒரு தினம் உட்கூரையிற் செருகியிருந்த ஒரு நூலைக் கண்டெடுத்தேன். அது முன்பக்கமும் பின்புறமும் இல்லாத பழைய நூல். விரித்தேன். முற்பகுதியிற் பட்டினத்தார் பாடல்களின் பிற்பகுதி. அடுத்து அமைந்தது சிவவாக்கியர் பாடலின் முற்பகுதி. தினமும் அந்நூலைப் புரட்டினேன். பட்டினத்தார் பாடல்கள் என்றாலும் படிப்பேன். பாடல் அமைப்பு, பொருளமைவு, நடை, சொல்லும் பாணி கருது கோளெல்லாம் ஒரு புதுப்பாணி. எனினும் அவை விளங்கியும், விளங்காத நிலையிலும் என் மனோரதத்தை மாற்றி ஒரு திருப்பு முனையளித்தன. எனவே சில பாடல்கள் என் நெஞ்சைக் கொள்ளை கொண்டன. தொடர்ந்து படிக்க எனக்கு வித்திட்ட அரும்பெரும் பொக்கிஷங்கள். பட்டினத்தார் உலகியல் வாழ்வை வெறுத்தமை, நிலையாமையை உணர்ந்தமை, பெண்ணுறவு, பிள்ளை நேசம் வெறும் கூட்ட மென்றவை போன்ற பல கருத்துப் பரிமாற்றம் என்னை வெகுவாகப் பாதித்துப் பக்கவப்படுத்தியன. ஒரு பாடல் வருமாறு.

நெருப்பான மேனியர் செங்காட்டில் ஆத்திநிழலருகே
இருப்பார் திருவுள்ள மெப்படியோ என்னையன்னைக்
கருப்பாசயக் குழிக்கே தள்ளுமோ கண்ணன் காணிய
திருப்பாத மேதருமே தெரியாது சிவன் செயலே.

இப்படிப் பல பாடல்கள் என் நெஞ்சோடு உறவாடின. இஃதே போலச் சிவவாக்கியர் தந்த பாடல்களிற் சில வரிகள் பொருள் பொதிந்தனவாயமைந்தன.

சாதியாவதேதடா, சமயமாவதேதடா,
சாதியும் சமயமும், மனத்துள்ளே
பறைச்சியாவதேதடா பணத்தியாவதேதடா
பறைச்சிபோகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ
இறைச்சி இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ
நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே,
சுற்றி வந்து மொணமொனென்று சொல்லும் மந்திரமேதடா,

நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவையறியுமோ

என்று பாடல்கள் நகரும்போது நானும் மெல்ல மெல்ல புரிந்தவன் போலானேன். இந்த விதை நல்ல விளைவைத் தந்தது. தொடர்ந்து அத்தடத்திலே தவழ்ந்து நடந்து விரைந்து ஓடினேன். ஒருமுகப் பாடல் இது.

மனத்தகத்தழுக் கறுத்த மௌன ஞான யோகிகள்
முலைத் தடத் திருக்கினும் மனத் தகத்தழுக் கறப்பரே
மனத்தகத் தழுக் கறுத்திடாத மௌன ஞான யோகிகள்
வனத்தகத்திருக்கினும் மனத்தகத்தழுக் கறுத்திடாரே

அக்காலத்திலே சமயபாடம் கட்டாய பாடமல்ல எனினும் சைவப்பள்ளிகளிலே நாவலர் சைவ வினாவிடை, பாலபாடம், போன்ற பல நூல்கள் மனப்பாடமாயின. விவேகானந்த சபை சமய பாடப் பரீட்சை நடத்திப் பரிசில் வழங்கியது. எனவே சைவப் பயிர் வளர்ந்தது. கெட்ட பழக்க, வழக்க, ஒழுக்கங்களென்ற களைகளும் வேரொடு கௌவ்வி வீசப்பட்டன. நல் ஆசிரியர்கள் நம்மை வழிப்படுத்தினர். இப்படியான தொழிற்பாடுகளாற் பஞ்ச புராணம் அறிமுகமானது. திருவாசகமும் அறிமுகமானது. எனவே அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பல பாடல்களை மனனஞ் செய்யப் பழகினேன். எனவே என் ஆர்வம், படிப்பு, அக்கறை, மனப்படிவு திருவாசகப் பக்கமாக மடை மாற்றம் செய்யப்பட்டது. எனவே திருவாசக ஈடுபாடு கைகூடிற்று. சமயப் பிரசங்கம் கேட்டல், குருபூசை செய்தல் போன்றவற்றால் நான் ஈாக்கப்பட்டு மெல்ல மெல்லத் திருவாசகப் பணியில் என் கவனம் திரும்பியது. சிறந்த நினைவாற்றலாற் பலவிதமான இலக்கியத்துறை சமயத்துறை சார்ந்த செய்யுட்களை நானாகவே தேடி மனனஞ் செய்யப் பழகிக் கொண்டேன். இந்த வழிப்படுத்தல் நான் ஆசிரியனாகக் கடமையாற்றத் துவங்கியதும் நற்பயனையளித்தது. நான் கண்டியிலே அத்தொழிலையாற்றத் துவங்கியபோது, பக்குவமான, பண்பட்ட உள்ளமுள்ள, நல்லாளுமையும், ஆற்றலும் நிறைந்த சிலருடன் உடனுறையும் வாய்ப்பு வந்தெய்தியது. அதில் இருவர் என்னை வளர்த்தெடுத்த கல்விமான்கள். ஒருவர் தியாகராஜ அண்ணை. ஆங்கிலம், தமிழ், சமயம் என்பவற்றில் துறைபோனவர். ஆசிரியராய் இருந்து, அதைத் துறந்து, கணககியல் கற்று அரசாங்க ஊழியரானவர். மற்றவர் இணுவில்த் தமிழறிஞர் மாணிக்கத் தியாகராஜா அவர்களின் மகன் ஆனந்தர் (ஆசிரியர்). இருவரும்

மாமனிதர்கள்.

தியாகண்ணையும் நானும் ஒரு அறையில் இருந்தோம். அவர் ஒரு தினம் ஐந்து ரூபாவுக்கு (கா. சுப்பிரமணியபிள்ளை எழுதிய) திருவாச நூல் ஒன்று வாங்கி வந்தார் துடைத்து விபூதி பூசி ஊதுவத்தி கொழுத்தி வைத்து (மின்சாரம் இல்லை மேசை விளக்கில்) படிப்பார். இடையிடையே எனக்கும் அவை பற்றி விளக்கஞ் சொல்லித் திருவாசகச் சுருதி கூட்டுவார். என் மனம் முன்னரே ஈடுபாட்டுடன் இருந்தபடியால் காந்தம் கவர்ந்த இரும்பானேன். நானும் ஒரு நூல் வேண்டி வந்து படிக்கத் துவங்கினேன். தெரியாததை ஆனந்தர் இடமும் தியாகண்ணை இடமும் கேட்பேன். எனவே படிப்பதற்குத் திட்டம் தீட்டினேன். அதிகாலை எழுந்து கடமைகளை முடித்துக், குளித்து தோய்த்துலர்ந்த ஆடையணிந்து விபூதி பூசி விளக்கேற்றி பத்தியை பத்த வைத்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பதிகமாகப் படிப்பேன். இவையுடன் பெரிய சத்தத்திற் படிப்பேன். யாரும் குறைகுற்றம் சொல்லவில்லை. எனது காதுக்குக் கேட்கும்படி தான் உரத்த குரலிற் படிப்பேன். காதுவழி பாடல்கள் சென்று என் மனதிலே படியும். (வாய்ப்பாடுகளை அப்படித்தானே பாடமாக்கினோம்.) சுமார் 1 மணித்தியாலம் மீண்டும் மீண்டும் ஒரே பதிகம் படித்ததும் நிறுத்தி எனக்கு விருப்பமான ஒன்றோ இரண்டோ பாடல்களை எழுதி என் சேட் பொக்கற்றில் வைப்பேன். நான் நாஷேனல் போடுவதில்லை. உணவை முடித்து பாடசாலை போவேன். மழை இல்லாவிடில் நடந்து போவேன். நேரம் போனால் மழை யென்றால் பஸ்ஸில் போவேன். 2½ மைல் தூரம் பாடசாலை போகவும் வரவும் பாடசாலையில் ஓய்வாய் இருக்கும்போதும் உலாத்தப்போகும்போதும் பாட்டுடன் சென்று படிப்பேன். எதுகை மோனைகளைத் தொடர்பு படுத்தினால் மனனஞ் செய்ய இலகு. பொருளை நன்கு விளங்கிக் கொள்ளல் நன்று. விளங்காத சொற்களின் கருத்தையும் அறிந்து இசைத்துப் பார்ப்பேன். இறை நினைப்பும், பக்தியும் இணையப் பாடல்கள் இலகுவாய்ப் பாடமாகும். துண்டைப் பாராமற் படித்துப் பார்ப்பேன். பாடமானதை ஒரு துண்டிலே (பாராமல்) நான் மனனம் செய்தபடி எழுதி ஒப்பிட்டு, பிழையோ சரியோ எனப் பார்ப்பேன். நித்திரைக்குப் போகும்போது தலைமாட்டில் புத்தகமும் எழுதிய துண்டும் வைப்பேன். தூக்கம் வரும்வரை கிடந்தபடியே படிப்பேன். தடங்கல் வந்தால் எழுந்து ரோச்லைற் அடித்து துண்டையோ திருவாசகத்தையோ எடுத்துப் பார்த்து சீராகப் பாடமாக்கிக் கொள்வேன். அடுத்த தினம் மனனஞ் செய்யும் பாடலுடன் முதல் நாள் அதன் முதல் நாள்

பாடமாக்கிய பாடல்களையும் அசைமீட்பேன். பஸ்ஸில் றோலியிற் போகும்போதும் சைக்கிளிற் போகும்போதும் பாடல்களைக் கடதாசியில் எழுதிக் கொண்டு செல்லும் பழக்கத்தைப் வைத்துக் கொண்டேன்.

நான் ஊரிற் தோட்டம் செய்யும் காலத்தில் இலக்கியப் பாடலையோ திருவாசகத்தையோ எழுதி மடியில் வைத்திருப்பேன். வாழைக்குத் தண்ணீர் கட்டும்போது மண்வெட்டிப் பிடியோடு சேர்த்து வைத்துக் கையால் பிடியைப் பிடிப்பேன். பிழையின்றிப் பாடம் பண்ண அடிக்கடி அத்துண்டைப் பார்ப்பேன். நான் படிப்பிக்கும் வகுப்பு மேசையில் திருவாசகப் பாடல் இருக்கும். நான் ஓய்வாய் இருக்கும்போது பாடம்பண்ணுவதற்கு அதுவும் ஒரு வழி எனலாம். பதிகங்களைப் படிக்கும்போது என் மனதுக்கு உகந்த பாடலை மட்டுமின்றி நெஞ்சையள்ளும் நெஞ்சைக் கரைக்கும் மாணிக்க வாசகரே உருகி உருகிப் பாடும் இடம் வரும் பாடல்களுக்கு முன்னுரிமை கொடுத்து அப்பாடல்களைப் பாடமாக்கியே அடுத்த பாடலுக்குப்போவேன்.

சிவமே பெறுந்திருவெய்திற்றிலேன் (சதகம்) நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த (சதகம் 6) இடையறா அன்புனக்கு என் ஊடகத்தே நின்றுருகத்தந்தருள் (சதகம் 7) ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன். (சதகம் 45) மாறிலாதமாக் கருணை வெள்ளமே (சதகம் 91) காருறு கண்ணியர் ஆற்றங்கரை மரமாய் (நீத்தல் விண்ணப்பம் 3) இருந்தென்னை ஆண்டு கொள் விற்றுக் கொள் (நீத்தல் விண்ணப்பம் 18)

கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேனை (திருவம்மானை5) தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை (அம்மானை 10)

கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்தி (திருப்பொற்சுண்ணம் 15) நான் தனக்கன்பின்மை நானும்தானும் அறிவோம். (கோத்தும்பி 12) நான் கெட்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ (தெளளேணப் பதிகம் 18) இரந்திரந்துருக என் மனத்துள்ளே (கோயில் மூத்த திருப்பதிகம் 6) வன்பராய் முருடொக்கும் (செததிலாப்பத்து 4) நெக்கு நெக் கென உருகி (புணர்ச்சிப் பத்து 8)

இப்படியான உத்தியையும் நான் கைக்கொள்வதுண்டு. தமிழிலே எழுந்த பக்தி இலக்கியங்களில் ஒரு சந்தனச் சோலையாகத் திகழ்வது திருவாசகம். சந்தன மரத்தை யண்டிய மரங்கள் எல்லாம் சந்தன மணம் வீசுவதுபோல, திருவாசகத்தை அண்டியோர் திருவாசகச் சிறப்பைப் பெற்றுச் சிவனையடைவர்.

கடலிலே மிதக்கும் அம்பர் வாசனைத்திரவியம் மேலானது. விலையுயர்ந்தது. அ∴தே போல திருவாசகச் சுகந்தம் நல்ல சிவச்சுவாசத்தையும் சுகாதாரமான ஆரோக்கிய வாழ்வையும் அளிக்கும். இவ்வாறு திருவாசக ஈடுபாடுள்ள காலகட்டத்தில் ஒரு முறை திருக்கேதீசுவரம் சென்றிருந்தேன். அங்கே தென் பாங்கரிலமைந்த குடிசையில் வதிந்த மறைஞானச் செல்வர் இறைஞானி தவயோகி சபாரத்தின சுவாமிகளைச் சந்தித்தேன். அந்தத் திருவாசகப் பேரூற்று திருவாசகமயமாகவே திகழ்ந்தார். எண்ணிடும்போதும் எழுந்திடும்போதும் உண்ணிடும்போதும் உறங்கிடும் போதும் தொழில் பண்ணிடும் போதும் கண்ணினுமினிய திருவாசகத் தமிழையே பேசினார். வாரி வழங்கினார். அவரின் பரீட்சயம் என்னை மேலும் திருவாசகப் பொருட்டில் ஊறித்திளைக்க வைத்தது. அவரைக் குருவாகக் கொண்ட இல்லற ஞானி சோதியம்மா அவர்களிடம் (ஊரெழு) சுவாமிகள் அடிக்கடி வருவார். நான் அவரிடம் சென்று திருவாசக உண்மைகளைக் கலந்துரையாடுவேன். இரவிரவாகச் சிலர் வந்து பாராயணம் செய்வர். இந்தச் சூழ்நிலையில் சுவாமிகள் என் குருதேவராய் வந்து வாய்த்தார். பதிகம் முழுவதாய்ப் படிக்கும்படி ஆற்றுப்படுத்தினார்கள். சில பதிகங்களைப் பத்துக்களை அதிகாலையிலே புனிதமாய் நீராடி தினமும் பாராயணம் பண்ணும்படி சொன்னார்கள். எனவே அந்த உத்தியைப் பயன்படுத்தும் போதும் பல பதிகங்கள் நெஞ்சில் இடம்பெற்றன. நடராஜப் பெருமானை முன் நிறுத்திப்படி பொருள் விளங்குமென்பார்கள். அது ஒரு அநுபூதி வாக்கு என்பதைக் கண்டேன். இருந்தும் மறைமலையடிகளெழுதிய முதல் நான்குரை கதிர்மணி விளக்கம் பேருரை இராமநாதன் உரைகளையும் படிப்பேன். திருவாசக சுவாமிகளெனப் போற்றப்படும் குருதேவரின் உறவால் திருவாசகக் கலப்பு ஏறப்பட்டது. அவர் ஒரு பாட்டை நான் படித்தால் எத்தனையாம் பதிகம் பாட்டு தலையங்கமென்ன என்றெல்லாம் கூறுவார். புறப்பொருளை விட்டு அகப்பொருள் சொல்வார். திருவாசகச் செம்மலான அவர்கள் காட்டிய திருவாசக வழி என் ஆன்மீகப் பாதையை செம்மைப் படுத்தியது. அம் மகானைப் பற்றி நான்கு நூல்கள் எழுதும் பாக்கியம் கிடைத்தது. கோடியில் ஒருவரான என் குருதேவரின் திருவடிகளே தஞ்சம். என் ஞான குருவாழி வாழி.

பல திருவாசகக் கட்டுரைகளை வரைந்தேன். சிவமகாலிங்கம் மென்னைத் திருவாசகச் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டினார். திருவாசகம் என்னை வழி நடத்துகிறது.

உ

சிவாயநம

# சிதம்பரத்தில் இந்து சமயப் பேரவை அடியார்கள்

மறுநாள் 8,12,07 காலை கீழரத வீதியில் தேரடி அருகில் திருமண மண்டபம் ஒன்றில் சிவபூசை வேள்வி நடைபெற்றது, நூறு சிவனடியார்களுக்கு மேல் சிவபூசை மேற்கொண்டார்கள், பூசைக்குத் தேவையான எல்லாத் திரவியங்களும் வழங்கப்பட்டன, திருமுறை வாணர்கள் திருமுறை ஓதினர், மங்கல இசைவாணர்கள் பூசைக்குச் சிறப்புச் செய்தனர், சிவபூசை நிறைவு செய்து எல்லோரும் உணவு உண்டு. திருக்கோயில் சென்று, பொன்னம்பலவன் சந்நிதியில். ஸ்படிகலிங்க திரு முழுக்காட்டும், ஆடல் வல்லானுக்கு நடைபெறும் தூப தீப வழிபாடுகளும் கண்டு அருள் பெற்றோம், மதிய உணவிற்குப்பின் ஆயிரங்கால் மண்டபத்தில் சிறப்பு விழா நடைபெற்றது, அறிஞர் பலர் அருளுரை ஆற்றினர். சிதம்பரம் திருமௌன மடாலயத் தம்பிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கலந்துக்கொண்டு முற்றோதுதல் நிகழ்த்திய சிவனடியார்களை பாராட்டியும். முற்றோதுதலினால் விளையும் பலன்கள் குறித்தும் அருளுரை ஆற்றினார். பேரவையின் திருமந்திரச் செழுமலர் நூல் வெளியீடும், திருமந்திர இறுத்தட்டு வெளியீடும் நடைபெற்றது, இரவு உணவும். தங்குமிடமும் மண்டபத்தில் நடைபெற்றது,

அடுத்த நாள் 9,12,07 காலை. முதல் நாள் போலவே சிறப்புச் சிவபூசை நடைபெற்றது, ஒன்ரோறியோ இந்து சமயப் பேரவை சார்பாக பூசை செய்த சிவபூசைச் செல்வர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, காலை உணவிற்குப்பின் ஓய்வும். மதிய உணவும் வழங்கப்பட்டன, அதன்பின் யானை ஒன்று வரவழைக்கப்பட்டு. பட்டுத் துணியினால் போர்த்தப்பட்ட பன்னிரு திருமுறை நூல் பிரதிகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டு பூசைகள் செய்து. சிறப்பு அலங்காரங்களுடன் சிவத்திரு சிவமுத்துலிங்கம் அவர்கள் யானையின் மேல் அமர்ந்து பன்னிரு திருமுறை நூல்ப் பொதியுடன் சிதம்பரம் தேரோடும் வீதியில் உலா வந்தார்கள்,

யானையின் முன்னால் மங்கல இசைக்குழலும் முழவும் வர, ஒரு சிவனடியார் சிவதாண்டவ நடனம் ஆடிவர, பேரவைச் சிவனடியார் பதினெண்மர் பன்னிரு திருமுறைகளை பட்டுத் துணியில் கட்டித் தங்கள் தலையின் மேல் வைத்துக் கொண்டு யானையின் இரு மருங்கிலும் முன்னும் பின்னுமாக உலா வந்தார்கள்,

இந்தத் திருமுறை வீதி உலாக்காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாயிருந்தது, முதல் முறை பெரியபுராணம் இயற்றி, ஓராண்டு விரிவுரை நிகழ்த்தி நிறைவு செய்த சேக்கிழார் பெருமானை. அநபாயச் சோழ மன்னன், யானை மீது உலா வரச்செய்து கவரி வீசிய காட்சி மனக்கண்ணில் விரிந்தது. சிவமுத்துலிங்கம் அவர்கள் இரண்டாம் சேக்கிழார் என்ற பட்டத்திற்கு உரியவரே, திருமுறைகளைத் தலைக்குமேல் சுமந்து வந்த பெண்கள் அனைவரும் திருஞானசம்பந்தரை பாண்டி நாட்டு மதுரைக்கு வரவழைத்து சமண சமயம்நீக்கி. சைவம் தழைக்கச் செய்த பாண்டிமாதேவி மஙகையர்க்கரசியாகவே தோன்றினார்கள்,

போக்குவரத்தை ஒழுங்குசெய்யும் காவலர்களும். பேருந்துகள். சிற்றூந்துகளில் பயணம் செய்தோரும். அங்காடிகளில் வணிகம் செய்து கொண்டிருந்தோரும். ரதவீதியில் வீடு கொண்டிருந்த இல்லத்தரசிகளும் குழந்தைகளும் இந்தத் திருமுறை உலாக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தார்கள். வணஙகினார்கள், வாழ்த்தினார்கள். பிஸ்கோத்தும் தேநீரும் கொடுத்து உபசரித்தார்கள். காலணியில்லாமல் வீட்டைவிட்டு வெளியில்வர பழக்கமில்லாத கனடா சிவனடியார்கள். காலணியில்லாமல் ஓர் இரண்டு கிலோமீட்டர் தூரம், நோவும் பாதங்களை மறந்து நடந்து வந்து சிவபுண்ணியம் செய்தனர், எங்களுக்கும் சிவனருளைப் பெற்றுத் தந்தனர். கழறிற்றறிவார் நாயனாருக்கிருந்த தமிழறிவு எனக்கிருந்தால் நானும் ஓர் ‘திருமுறை ஞான உலா’ என்றொரு நூல் செய்திருக்கலாமே என்ற மன ஏக்கம் ஏற்பட்டது. ஊன்றுகோல் உதவியுடன் நடந்து செல்லும் சிவனடியார் ஒருவர் உட்பட யாருமே திருமுறை நூல்களை தலைமீதிருந்து கீழே இறக்காமலும். வேறு யாரிடமும் கொடுக்காமலும் தாங்களே முழுநேரமும் ஆர்வத்துடனும். பக்தியுடனும் சுமந்து வந்தது என் போன்ற பலருக்கு கண்ணீரை வரவழைத்தது, திருமுறைகள் நிகழ்த்தும் அற்புதங்களில் இதுவும் ஒன்றாகும் என்று உணர்ந்தேன்,

திருமுறை உலா யானையின் மேல் கீழைக்கோபுர உள்வாயிற்புறத்துடன் நிறைவடைந்தது. அடியார்கள் தலைமேல். திருச்சுற்று. கொடிமரம். பொன்னம்பலத்தையும் சுற்றி வலமாக வந்து ஆயிரம் கால் மண்டபத்தில் நிறைவு பெற்றது, திருமுறைகளை தலைமீதிருந்து மண்டபப் படிகளில் இறக்கி வைக்கும் போது எழுந்த ‘தென்னாடுடைய சிவனே போற்றி’ எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி’ என்ற சிவனடியார் கூட்டத்தின் பேரொலி திருக்கயிலாயத்தில்

நிட்டையிலமர்ந்திருந்த முனிவர்களின் காதில். எட்டியதும், காரணம் யாதென்று வினவ அவர்களுக்கு பதிலிறுக்கும் வண்ணம் உபமன்னிய முனிவர் - 'பூலோகத்தில். சிவமுத்துலிங்கம் என்ற சிறந்த சிவனடியார். சிவகணங்கள் போன்ற பதினெட்டு சிவனடியார்களுடன் பன்னிரு திருமுறைகளை தமிழகத்திலே முற்றோதல் செய்து ஆடல் வல்லான் கோவில் வளாகத்தில் நிறைவு செய்து. திருமுறைகளை யானையின் மேல் வைத்து கோயில் திருவீதி உலாச் செய்து அம்பலவனும் அம்மையும் மார்கழித் திருவாதிரை நாளில் திருமஞ்சனம் கொள்ளும் ஆயிரங்கால் மண்டபத்தில் உலா நிறைவு செய்யும் போது அடியார்கள் ஒலித்த போற்றித் திருவாக்குகளை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட கயிலைநாதன் அவர்களின் சிறப்பை அகில உலகுக்கும் அறிவிக்கிறான். அதுவே நம் செவிகளில் ஒலித்தது என்று விளக்கியருள சிவசொருபத்திலிருந்து இதைச் செவிமடுத்த அறுபத்து மூன்று நாயன்மார்களும். ஒன்பது தொகையடியார்களும், சேக்கிழார் பெருமானும். அநபாயச் சோழனும் மகிழ்வுற்று. சிவமுத்து லிங்கத்தையும் முற்றோதல் செய்த சிவனடியார்களையும் வாழ்த்தினர்.

தொடர்ந்து நடந்த விழாவில் எண்பத்தைந்து அகவை நிரம்பிய அறிஞர் ஒருவர் தன் வாழ்நாளில் இதுபோன்ற விழாவைத்தான் கண்டதுமில்லை - கேட்டதுமில்லையென்றும். பதினெண் அடியார்களும் பதினெண் சிவகணங்களாகத் தெரிந்ததாகவும் கூறினார. பேரூர் ஆதீன இளையபட்டம் மருதாசல அடிகளும், சிதம்பரம் மௌன மட தம்பிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் மற்றும் ஒரு தம்பிரான் சுவாமிகளும் விழா அமைப்பாளர்களின் அழைப்பை ஏற்று மனமுவந்து விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தார்கள். சான்றிதழ்கள், பாராட்டுகள் வழங்கப்பட்டன, திருமுறைப் பண்ணிசையுடன் விழா நிறைவுற்றது, அடியார்களுக்கு திருமண மண்டபத்தில் இரவு உணவும் வழங்கி சிறப்பித்தார்கள்,

இவ்விழாக்களில் கலந்து கொண்டு இன்புற அருள்புரிந்த சிவபிரானுக்கும். திரு,சிவமுத்துலிங்கம். திரு,சோமசுந்தரம். திரு,கந்தவனம் மற்றும் சிவனடியார்களுக்கும் அடியேனும். அடியேனுடைய துணைவியாரும் நன்றியை உவகையுடன் தெரிவிக்கிறோம்,

சிவாய நம

வணக்கம்

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

## திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

1. கடவுள் உனது கண்களுக்குத் தெரியவில்லையே என்பதற்காகக் கடவுளே இல்லை என்று சொன்னால் பெரிய பாவமாகும்.

2. பாவம் செய்தவர்கள் தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய சிவபெருமானின் பெருமையை அறிய முடியாது.

3. அவரவர் செய்த வினையின் பிரகாரம்தான் அவரவருக்கு உணவு கிடைக்கும்.

4. முற்காலத்தில் சைவர் மாத்திரம் அன்றி சிவலிங்க வழிபாட்டை எல்லோரும் செய்தனர்.

5. ஒவ்வொரு உயிருக்கும் தன்னுயிர் மேல்தான் நீங்காப்பற்று இருக்கும்.

6. மரத்தை நேராக வெட்டுவதற்கு நூலை பயன்படுத்துவார்கள். இந்த நூல் மரத்தில் உள்ள கோணலைப் போக்கவல்லது புத்தகத்திற்கும் நூல் என்று பெயர் புத்தகமாகிய நூல் மனத்திலுள்ள கோணலைப் போக்க வல்லது.

7. பக்தனுக்கு உள்ளும் புறமும் காட்சி தந்து நம்மைப் பக்குவப்படுத்துகிறவன் எவனோ அவனே எல்லாம் வல்ல பரம் பொருளாகிய சிவபெருமானாவார்.

8. ஆற்று நீரும் கடல் நீரும் கலந்து விட்டால் ஆற்று நீர் கடல் நீராவது போல ஜீவாத்மா பரமாத்மாவுடன் சேர்ந்து விட்டால் அந்நிலை அத்துவித முத்திநிலை எனப்படும்.

9. நற்குண நற்செயல்களைப் தமதாக்கிக் கொள்ளும் பருவமே மாணவப் பருவமாகும்.

10. கதைகளை சொல்லும் பொழுது இனிமையாகச் சொல்ல வேண்டும். அந்தக் கதைகள் கற்கும் பிஞ்சு நெஞ்சங்களில்

நல்லறிவுச்சுடர்களை ஏற்றவும் வேண்டும்.

11. நல்லறிவு பெற்ற மக்களே நல்லவர்களாக விளங்குவார்கள். நல்லவர்கள் வாழும் சமுதாயமே நற்சமுதாயமாக விளங்கும்.

12. மரணதேவனின் முரட்டுப் பிடியில் உழலும்பொழுது அழுதழுது கவலைப்படுவதில் என்ன பலன்? ஏ மானிட ஜென்மங்களே மூலப்பரம்பொருளை ஒவ்வொரு மூச்சின் பொழுதும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

13. தினந்தோறும் உனது வாழ்க்கை வீணாக கழிந்து போகிறது. இவ்வாழ்க்கை கடவுளை வணங்குவதற்காகவே ஏற்பட்டது. எனவே மனித குலமே இறைவனை பிரார்த்தனை செய்வதில் கவனம் செலுத்து

14. காதற்ற ஊசியும் வாராது காணும்கடை, வழிக்கே என்பதே உண்மை. ஆனால் நாம் நம்முடன் எடுத்துச் செல்லும் பொருள் ஒன்று மட்டும் உண்டு. அது யாதெனில் நாம் செய்த செயல்களின் பயனேயாகும்.

15.அருள்பழுத்த உள்ளத்தவர்களே தியாகம் செய்ய முடியும். இயற்கை தியாக வாழ்வை எமக்கு உணர்த்திக் கொண்டே யிருக்கிறது. உப்பு தான் அழிந்து சுவையைக் கொடுக்கிறது. ஊதுபத்தி தான் அழிந்து சுகந்தத்தைக் கொடுக்கிறது. சந்தனக்கட்டை தான் தேய்ந்து மணம் கமழ்கிறது. மேகம் தான் அழிந்து மழையைப் பொழிகிறது. பகுத்தறிவுடைய மனித வாழ்வும் இப்படித் தியாக வாழ்வாகப் பரிணமிக்க வேண்டும் என்பதே இறைவனுடைய விருப்பமாகும்.

16. யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்தபுராணமும் திருவாசகமும் கலந்த கூட்டுக் கலவையாகும்.

17. சைவ ஆசார சீலராக விரதம் அனுட்டித்து கந்தபுராணம் படிப்பதும் கேட்பதும் யாழ்ப்பாணத்தில் கண் கொள்ளாக் காட்சியாகும்

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA


## குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா

**OFFERED TO THE PUBLIC BY**
**CHILDREN'S EDUCATION FUNDS INC.**
**A VERY DIFFERENT R.E.S.P**

அரசாங்கத்தின் இலவச 20% நன்கொடையும் வழங்கப்படும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற புலமைப்பரிசில் சேமிப்புத் திட்டம். இருவருட டிப்ளோமா பத்திரப் படிப்பைபப் பூர்த்தி செய்து எல்லாப் புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

FOR MORE INFORMATION PLEASE CONTACT

**Siva Kanapathypillai**



சிறந்த சேவையையும், ஆலோசனைகளையும் பெற தொடர்பு கொள்ளுங்கள்:

சிவா கணபதிப்பிள்ளை

Bus: 416 -438 -0660 / 416-438-3578
Res: 905 -472-1139 Call: 416-899-6044
FAX: 416 -438 -8532

2100 Ellesmere Road, Suite#307, Scarborough, Ontario M1H 3B7

# APPLEMORE

# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe

**Ontario Emission Inspection**



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்

குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்


**TEL: (416) 285-4998**

**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

ISSN 1703-9185


# முருகன் புத்தகசாலை

இரு இடங்களில் உங்களை வரவேற்கிறது



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகளை
இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்.

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION MONEY TRANSFER**

**1241A, ELLESMERE ROAD, SCARBOROUGH, ONTARIO, M1P 2X8, CANADA.**

**TEL : (416) 285-9118**

**GTA MALL, 5215 Finch Ave. E., Unit 109**

**Tel: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA *Printers*

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies




80 Barbados Blvd., Unit 4
Scarborough, ON
Tel : (416) 410-6401